-Germany: 1.25DM, Switzerland: 1.30SFr, France: 6Frs, U.K: 60P, Canada: $ 1.25, Denmark: 6Kr, Holland: 1.50 Gul-

வருடம் - 04 திருவள்ளுவர் ஆண்டு - 2028 இதழ் - 34

Largest Circulation in Europe

# இளைஞன்

தை - பங்குனி - 1998 காலாண்டு இதழ் - ஜெர்மனி

அம்பாள் ஆசியன் சொப்

சாறிவகைகள், எவர்சில்வர் பொருட்கள், அலங்காரப்பொருட்கள்
தங்கநகைகள், மங்கல வைபவங்களுக்குத் தேவையான அனைத்து தேவைகளுக்கும்
மற்றும் கடலுணவுப்பொருட்கள், மரக்கறி வகைகள் உங்கள் அனைத்து
தேவைகளுக்கும் நாடுங்கள்

AMPAL ASIAN SHOP, Mainzerland Str, 111
60329 Frankfurt/M, Tel & Fax: 069/ 231277

**ELAIGNAN - 24 HOURS SERVICES CALL: 0172 - 4189964**

## உள்ளே...



- ஈழத்துக்காந்தி தந்தை செல்வாவை நினைவு கூருவோம்!
- இனிய வாழ்வுக்கு எளிய திருமணம்!
- வாத்துக் குஞ்சு (சிறுகதை)
- குடிகாரக் கணவர்களை திருத்த ஒரு வழி...?
- இன்னும் பல...

## கந்தப்புவும், சோமண்ணையும்



கந்தப்பு: உங்கட மனுசி உங்களை விவாகரத்து செய்யப்போறாள் என்று சொன்னீர்கள். இப்ப நிலைமை எப்படி?

சோமண்ணை: இப்ப மனுசி என்னோடதான் வாழப்போறன் என்று வீட்டோட வந்திட்டா.

கந்தப்பு: திரும்பி உங்களோட வந்துவாழ ஏன் முடிவு செய்தவவாம்?

சோமண்ணை: ஒரு கதையொன்று விட்டன், அவ பயந்து திரும்பவும் என்னிடமே வந்திட்டா.

கந்தப்பு: அப்படி என்ன கதை?

சோமண்ணை: 'டைவர்ஸ்' எடுத்திட்டுப்போன டயானாவோட முடிவுதான் உனக்கும் என்றேன் உடன் ஆள் வீட்ட வந்திட்டுது.

கந்தப்பு: ???!!!...

RAVI செல்லத்துரை




ஆதவா ஆசியா சென்ரர்

தங்க நகைகள், சேலை வகைகள், ரெடிமேட் உடுப்புக்கள், எவர்சில்வர்ப் பொருட்கள், திருமண வாழ்த்து மடல்கள், ஓடியோ வீடியோ, சிடி, வார மாத பத்திரிகைகள், மரக் கறி, கடலுணவு வகைகள், அனைத்தையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள-

ADAVAA ASIYA CENTAR

Taunus Str- 15, 60329 Frankfurt/M, Germany Tel: 069/ 25 03 61-2, Fax: 069/ 23 40 45



http :\\www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
1088/09

வருடம் - 04 இதழ் - 34 தை - பங்குனி 1998

# இளைஞன் பார்வையில்!

## ஈழத்துக் காந்தி தந்தை செல்வாவை நினைவு கூருவோம்!

இலங்கைத்தமிழர்களில் அரசியல் ரீதியில் தமிழர்களின் நலனுக்காக போராடி, வாதாடி இன்னல்களையும் பல சோதனைகளையும் எதிர்கொண்டவர்கள் ஒரு சிலரே. அவர்களில் முன்னோடியாக நின்றவர் -தந்தை செல்வா என பெரியவர்களும், சிறியவர்களும் செல்லமாகவும் மரியாதையுடனும், உரிமையுடனும் அழைக்கப்பட்ட அமரர் சாமுவேல் J. வேலுப்பிள்ளை செர்வநாயகம் அவர்கள். தற்பொழுது இவரின் நூற்றாண்டு நினைவு விழாக்கள் பல நாடுகளில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதை நினைவு கூரும் முகமாக 'இளைஞன் பார்வையில்' பார்ப்போம்.

இன்றைய இளம் சந்ததியினருக்கு குறிப்பாக வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களுக்கு இப்பெரியார் பற்றிய அறிவுஞானம் இருக்காது என்பதே எமது கணிப்பாகும். ஆகவே இவர் பற்றி ஒரு சில குறிப்புகளைத்தந்து நினைவு கூருவோமாக.

தந்தை செல்வா அவர்கள் மலேசிய நாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெற்றோர்களுக்கு 1898 இல் பிறந்தவர். எனினும் தனது தாய்நாடாகிய இலங்கைக்கு இளம் வயதிலேயே வந்தவர். இராணியின் பட்டம் பெற்ற வழக்குரைஞர்களில் பிரபலமாகத் திகழ்ந்தவர். 1948 இல் முதல் பாராளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்று காங்கேசன் துறைப் பிரதிநிதியாகச் செயல் பட்டார். இலங்கைத் தமிழ் காங்கிரஸ்ஸில் மற்றொரு தமிழ் தலைவனாகத் திகழ்ந்த ஜீ. ஜீ. பொன்னம்பலத்துடன் தமிழர்களின் நலன்களுக்காகத் துணிவுடன் வாதாடினார். தமிழ் காங்கிரஸ் அங்கத்தவர்கள் சிலர் மந்திரிப்பதவிகளில் இருந்த தன் காரணமாக தமிழர்களாய் இருந்த மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு குடியுரிமை பறிக்கப்படும் மசோதாவை 1948 இல் சிங்கள அரசு கொண்டு வந்திருந்தபொழுது எதிர்ப்புக் காட்டவில்லை என்ற காரணத்தால் அக்கட்சியிலிருந்து வெளியேறி திடமான நம்பிக்கையுடன் இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி என்ற தமிழருக்கு நலம் தரக்கூடிய கட்சியொன்றை தந்தை செல்வா ஆரம்பித்தார். காங்கிரஸிலிருந்து இன்னும் பல தமிழ் தலைவர்களும் விலகி தந்தை செல்வா அவர்களுக்கு தோள் கொடுத்துதவினர். இதுவே (FEDERAL PARTY) சமஷ்டிக்கட்சி என்றளவுக்கு பிரபல்யம் வாய்ந்தது.

ஈழத்து வடகிழக்கு மாகாணங்களில் இக்கட்சியினரே பெரும்பான்மையாகத்திகழ்ந்தனர். இதுவே பிற்காலத்தில் மற்றத் தமிழ் கட்சிகளையும் அரவணைத்த TULF தமிழர் ஒற்றுமை விடுதலை முன்னணி என பிரகடனப்படுத்தப்பட்டு 198.. இல் ஈழம் மட்டுமே என்ற தீர்மானக்குரல் கொடுத்தது. இதையே தமிழர்கள் வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்பர். இதற்கெல்லாம் காரணகார்த்தாவாக இருந்தவர் தந்தை செல்வாதான் என்பது உலகம் தெரிந்த மறுக்க முடியாத உண்மையெனலாம். இதற்கெல்லாம் காரணம் அவரிடமிருந்த நற்பண்புகள், வீரஉணர்ச்சிகள், தமிழர்கள் எவருக்கும் அடிபணிய வேண்டியதில்லை என்ற அபிமானம், நாட்டுப்பற்று, சாத்வீக உணர்வு, அரசியல் சட்டஞானம் என்பவையே.

இவை மட்டுமல்லாது பன்னாட்டு அரசியல் முறைகளை அக்குவேறு ஆணிவேறாக மேற்கோள்காட்டி தனது உரையின் மூலம் பகிரங்கப்படுத்தி சிங்களவர்களை நம்பச்செய்த ஆற்றலும் போற்றத்தக்கன. இவற்றிற்கெல்லாம் உரைகற்களாக இருப்பது அவர் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைகள். சிங்கள தேசியக்கொடி, இந்திய வம்சாவளித் தமிழர்களின் குடியுரிமை மசோதாஇ தேர்தல் திருத்த மசோதா, அரச கருமமொழிச்சட்டம், வடக்கு கிழக்குத்தமிழர், இஸ்லாமியத் தமிழர், மலையகத்தமிழர்களை ஒன்றுபடுத்தி தமிழின ஒற்றுமை போன்ற பேச்சுக்கள் இவையெல்லாம் உலக மக்களை பெரிதும் ஈர்த்தன எனலாம்.

சத்தியாக்கிரகங்கள் ஒத்துழையாத ஆர்ப்பாட்டங்கள் மூலம் தமிழர்களுக்கு வேண்டிய உரிமைகளையும் சிங்கள அரசுகளால் தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் பகிரங்கப்படுத்தி உலகின் கண்களைத்திறக்கச் செய்தவர் தந்தை செல்வா என்றால் மாறுபட்ட கருத்து கிடையவே கிடையாது.

தமிழர்கள் சிங்களவர்களின் பகைவர்கள் அல்ல, எனினும் தமிழர்களின் மொழிஉரிமை, நில உரிமை, கொடி உரிமை, குடியுரிமைகள் பறிக்கப்படுகின்றதாலேயே போராட்டங்கள் என ஆணித்தரமாக உணரவைத்தவர் தந்தை செல்வநாயகம் அவர்களே.

இவரின் ஆற்றல்களையும் திறமையையும் அறிவையும் பாராட்டிப்பல சிங்கள அறிஞர்களே உலகறிய ஒப்புக்கொண்டு தக்க மரியாதை கொடுத்தனர். 'இன்று மலையகத்தமிழர்கள் மேல் வைக்கும் கத்தி நாளை இலங்கைத்தமிழர்கள் மீதும் வைக்கப்படாது என்பது என்ன நிச்சயம்?' என்று அன்று கூறியது, அன்னாரை ஒரு தீர்க்கதரிசி என இன்று கூறுமளவிற்கு தமிழ்ழ மக்களுக்கு சிங்கள மக்களால் அநீதிகள் விளைவிக்கப்படுகின்றன.

ஆகவே இப்பெரியாரின் பேச்சுக்களில் உதிர்ந்த சில முத்துக்களை 'இளைஞன்' வேறோர் பகுதியில் தொடராகத்தர விரும்புகின்றான். இதுவே தந்தை செல்வாவுக்கு தரும் பாதபூஜையாகும். இளம் சந்ததியினரின் நரம்புகளில் முறுக்கேற இவை துணைபுரிவதாகுக.

---

பணக்காரர் ஒருவர் கிளப்பில் பணம் வைத்து சீட்டாடிவிட்டு வெளியே வந்தார். அவர் முகம் சுண்டிப்போயிருந்தது.

தம்முடைய காரில் ஏறிக்கொண்டார். 'எங்கே ஐயா காரை ஓட்டுவது?' என்று கேட்டார் சாரதி.

'ஏதாவது ஒரு மலைமேல் ஏறித் தலைகீழாய் இறங்கு. நான் தற்கொலை செய்யத் தீர்மானித்து விட்டேன்.' என்றார் பணக்காரர்.

சாரதி கதிகலங்கி நின்றார்!

"இளைஞனால் உலகில் ஒன்றிணைவோம்!"

Largest Circulation in Europe
இளைஞன்

முகவரி:-
ELAIGNAN
GINNHEIMER STR. 24 A
60487 FRANKFURT/M
GERMANY
Tel & Fax: 069/ 70 44 39
Private: 0172/ 4189964

அச்சுப்பதிப்பு: சிந்துநதி பதிப்பகம்

Editor: ARTIST SEGAR
ஆசிரியர்: ஓவியர் சேகர்

இணை ஆசிரியர்:
ஏ. ஜே. ஞானேந்திரன்

துணை ஆசிரியர்:
ரவிசெல்லத்துரை

நமது நிருபர்கள்:
கொழும்பு: R. பார்த்தீபன்
சென்னை: எம்ஆர்ஜி

சந்தா விபரம்:
சகல நாடுகளுக்கும்
ஒரு வருடம்: 15 DM
(தபாற் செலவுடன்)

"இளைஞன்" உலக பிரதிநிதிகள்

சுவிற்சலாந்து
A. J. ஞானேந்திரன்
Hard str. 11
4127 Birsfelden
Basel (CH)
Tel: 061/ 3 11 25 44

பரீஸ்
வண்ணை தெய்வம்
Log. 18023
212, Ave. du 8mai 1945
93150 - Blanc Mesnil
France Tel: 48 67 01 25

டென்மார்க்
S. செல்வன்
Nr. Sundbyvej - 28 st.
8900 Randers
Tel: 86 41 66 32

லண்டன்
சிவம் - பரமலிங்கம்
15 Farn House
HA0 4Uy Wembly - UK
Tel: 0181/ 90 28 20 9

கொலண்ட்
J. S. ஞானமுத்து
Pastorijstraat 48
6361 Aj Nuth
Holland
Tel: 045/ 52 42 90 3

ஜேர்மனி
T. ஜோதி
Friesen str. 47
59067 Hamm
Tel: 02381/ 41 93 93 0

## மதிப்பு



'வாழ்ந்தால் குயிலைப்போல் வாழவேண்டும்' என்றது பட்டாம்பூச்சி.

இன்னொரு பட்டாம்பூச்சி கேட்டது:-

'ஏன்?'

'அதோ பார்... மா மரத்தில் பாடுகிறது குயில். மா மரத்துக்காகத்தான் அது பாடுகிறது. பின்பு மாங்கனியைச் சாப்பிடுகிறது. பறக்கிறது.'

'புரியவில்லையே...'

'யாருக்கும் கடமைப் படக்கூடாது. கொடுத்துப் பெறு. தங்கி வாழாதே.'


'ஓ! இப்போது புரிகிறது!' என்றது இரண்டாவது பட்டாம் பூச்சி.

தனக்குள்ளேயே அது சொல்லிக்கொண்டது:-

'மரத்துக்கு ஒரு பாட்டு
குயிலுக்கு ஒரு பழம்.'

**காசிஆனந்தன்.**

## ஏசுவின் முதல் படம்!



மாதா கோவில்களிலும், தேவாலயங்களிலும் ஏசு கிறிஸ்துவின் படங்கள் இருக்கின்றன. இன்றும் ஏசு படங்கள் ஏராளமாக வரையப் படுகின்றன. ஆனால், இவை உண்மையாகவே ஏசுநாதரின் படங்கள்தானா? அல்லது, கற்பனையான உருவமா?

உண்மையான உருவம் என்றால் அதை முதலில் வரைந்தவர் யார்? கற்பனையான படம் என்றால், இதை யார் வரைந்தார்?

### முதல் படம்

ஏசுநாதரின் காலத்திலேயே அவரது முதல் படம் வரையப்பட்டது என்று வரலாறு கூறுகின்றது, ஏசுநாதரின் 12 சீடர்களில் ஒருவரான புனித லூக்காஸ் இப்படத்தை வரைந்தார்.

ஏசுவின் 30 வது வயதில் வரையப்பட்ட அந்தப்படம் இன்றும் இத்தாலி நாட்டில் புனித பர்தலோமோ ஆலயத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டு இருக்கிறது.

ஏசுவின் புகழை கேள்விப்பட்ட எடிசா நாட்டு அரசர், ஏசுவை தனது நாட்டுக்கு அழைத்தார். அந்த அழைப்பை ஏற்றுக்கொள்ள இயலாத ஏசுகிறிஸ்து, தனது படம் ஒன்றை வரையச் செய்து அரசருக்கு அனுப்பி வைத்தார். படத்தை வரைந்தவர் லூக்காஸ்.

### 2 வது படம்

ஏசுநாதரின் மற்றொரு படம் ஒன்றை மரப்பலகையில் லூக்காஸ் வரைந்தார்.

அந்தப்படம் இன்றும் வாடிகன் நகரில் போப் ஆண்டவரின் அரண்மனையில் இருக்கிறது.

### சென்னையில்

3 வது படம் ஒன்றையும் லூக்காஸ் வரைந்தார்.

தாய் கன்னிமேரியின் மடியில் ஏசுபாலன் அமர்ந்து இருப்பது போன்ற படம், அது.

52 ம் வயதில் இந்தியாவுக்கு வந்த ஏசுநாதரின் தூதர் புனித தாமஸ், அந்தப்படத்தை இந்தியாவுக்குக் கொண்டு வந்தார். சென்னையை அடுத்த புனித தாமஸ் மலையின் மீது உள்ள மாதா கோவிலில் அந்தப்படம் இன்றும் இருக்கிறது.

### முழு உருவப்படம்

இந்தாலியில் புனித டாமியன் கோவிலில் ஏசுநாதரின் முழு உருவப்படம் இருக்கிறது. ஏசுவின் முதல் முழு உருவப்படம் அதுதான்.

அதை வரைந்தது யார் என்ற வரலாறு கிடைக்கவில்லை.

ஜெர்மனியில் மலிவு கடை என்று மக்களால் அழைக்கப்படுவது..

**ஆச்சி துணை**

ஐயர், மணவறை, சோடனை, திருமண அழைப்பிதழ்கள், கமெரா போன்ற உங்கள் வைபவங்களுக்கான தேவைகளுக்கு நீங்கள் ஓடி, ஓடி அலையாமல் ஒரே இடத்தில் ஆலோசனையை மாத்திரமன்றி அனைத்து சேவைகளையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

**AACHCHITHUNAI, Salinen str 1/1, 74177 Bad Friedrichshall, Germany, Tel & Fax: 07136/ 3921-**

# தேன்கூடு

ஏ.ஜே. ஞானேந்திரன்

# அன்னையர்க்கெல்லாம் அன்னை அவர்!

பிறருக்காகவே வாழ்வது என்பது எல்லோராலும் முடிந்த காரியமல்ல! தன் தேவைகளைத் துச்சமாக மதித்து, ஏனையோர் தேவைகளை நிறைவேற்றுவதே தன் சேவையாகக் கருதி வாழ்வது என்பது ஆயிரத்தில் ஒருவரால் தான் செய்ய முடிகின்றது. பிறருக்குப் பணிவிடை செய்வதே தமது



பேரின்பம் என்று கருதி வாழும் பக்குவம் என்பது இலகுவில் எல்லோருக்கும் வந்து விடப்போவதில்லை.....

அன்னை என்ற ஸ்தானம் அதி உன்னதமான ஒன்று. அதிலும் அன்னையர்க்கெல்லாம் அன்னை என்ற ஸ்தானத்தை அடைவது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. ஆனால், அண்மையில் உயிர்நீத்த அன்னை திரேசா, தன் அரும்பெரும் சேவைகளால் இன்று அன்னையர்க்கெல்லாம் அன்னை என்ற உயர் அந்தஸ் த்தை எய்தி, இன்று தன் மறைவிலும் மனித குலத்தில் ஒரு நிரந்தர இடத்தைப் பிடித்திருக்கிறார்.

87 வயதில் உயிர்நீத்த இந்த மூதாட்டியை, "கல்கத்தாவின் பெண்தெய்வம்" என்றுகூட வர்ணிக்கிறார்கள். இப்படி உயர்வாக வர்ணிக்கப்படும் அன்னை திரேசாவின் இயற்பெயர் AGNES GONXHA BOJAXHIU (வாய்க்குள் நுழையாத பெயர்தான். ஆனால் இவர் இன்று எல்லோரது இதயங்களுக்குளுமல்லவா நுழைந்து குடிகொண்டு விட்டார்!) 1910 ம் ஆண்டு ஆகஸ்ட் 26 ம் நாளன்று இவர் பிறந்தார்.

அன்னை திரேசா எந்த நாட்டவர் என்பது பலருக்கு குழப்பமளிக்கும் ஒரு விடயமாக இருந்து வருகின்றது.

இவர் தந்தை ஒரு அல்பானிய நாட்டு வர்த்தகர் என்பதால் (ஒப்பந்த அடிப்படையில் வேலைகளை மேற்கொள்பவர்) மகளான அன்னை திரேசாவும் அல்பானிய நாட்டவரே என்பதை மறந்து விடலாகாது, மசிடோனியா நாட்டின் இன்றைய தலைநகரான SKOPJE என்ற நகரில் இவர் பிறந்ததால், இவர் அல்பானிய நாட்டவர் என்று பலர் தவறான கருத்தைக் கொண்டுள்ளார்கள்! இவருக்கு ஏழு வயதாக இருக்கும்போதே உள்ஊரில் ஏற்பட்ட இனக் கலவரம் காரணமாக, அன்புத் தந்தையாரை அன்னை திரேசாவினால் இழக்க வேண்டி நேரிட்டது.

12 வயதிலிருந்தே ஏழைகளுக்கு உதவவேண்டும் என்ற ஆசையைத் தன்னுள் வளர்த்துக்கொண்ட இவர், தனது 18 வது வயதில் அயர்லாந்தின் லொரெற்றோ சகோதரிகள் என்ற அமைப்பில் இணைந்து கொண்டார். பிரான்ஸ் நாட்டுப் புனிதரான திரேசாவின் ஞாபகர்த்தமாக, இவரும் தன் பெயரைத் திரேசாவாக மாற்றிக் கொண்டார். (இப்புனித திரேசா தன் வாழ்நாட்களில் நோயாளிகளை நேருக்குநேர் சந்தித்து துணிவோடு சேவையாற்றி தன் இளமைக் காலத்திலேயே மரணமெய்தியது குறிப்பிடத்தக்கது.)

ஒரு குறுகிய காலத்தை ஆங்கிலம் படிப்பதில் செலவிட்ட இவர், இந்தியாவிற்கு கப்பலில் பயணமாகினார். அடுத்த 17 வருடங்கள் ஆசிரியையாகவும், கல்லூரி அதிபராகவும் இந்தியாவில் இவர் வாழ்க்கை கழிந்துள்ளது. கல்கத்தா நகரிலுள்ள வங்காளப் பெண்களுக்கான ஒரு உயர்கல்லூரியிலேயே இவர் கடமையாற்றினார்!

மனித வாழ்க்கையிலே மாற்றங்கள் எப்பொழுது எந்த ரூபத்தில் வரும் என்பது எவராலுமே சொல்ல முடிவதில்லை. 1946 ம் ஆண்டு, செப்டம்பர் 10 ந் திகதி அன்று அன்னை திரேசா டார்ஜீலில் நகரை நோக்கி ரயிலில் பயணமாகிக் கொண்டிருந்த போதுதான், அவருக்குத் "தேவ அழைப்பு" வந்ததாக அவர் உணர்ந்தார். இது கடவுளின் கட்டளை என்று அவர் இந்த அழைப்பை எடுத்துக் கொண்டு கான்வென்ட் வாழ்க்கையை விட்டுவிட்டு, ஏழைகளுக்குத் தொண்டு செய்யும் பணியை ஆரம்பித்தார்.

1948 இல் இந்தியாவில் "சுதந்திரக் காற்று" வீசியது! தன்னிச்சையாக இயங்க, அன்னை திரேசாவிற்கும் ரோமிலிருந்து உத்தரவு கிடைத்தது. பன்னிரண்டு பேர் வரையிலான சீடர்களுடன் அன்னை திரேசா

தொடர்ச்சி 22 ம் பக்கம்.



# இடியா ஐயாசாமி



**ரவிசெல்லத்துரை எழுதும் நகைச்சுவைத் தொடர்...**

வணக்கம் தமிழ் மக்களே! உங்களைக்கண்டு நாலு புதினம் உங்களிட்ட சொல்லாட்டி இந்த ஐயாசாமிக்கு தூக்கம் வராது பாருங்கோ. இப்ப எங்கட சனம் முன்ன மாதிரி இல்லை பாருங்கோ. முன்ன எல்லாம் ஆட்களை ஆட்கள் கண்டால் ஆளுக்கு ஆள் புதினங்களை போட்டி போட்டு சொல்லுவினம்.

இப்ப யாரையும் வழியிலை கண்டு எப்படி சுகம் எண்டால், விளக்கெண்ணெய் வடியிற முகதோட 'ஓ... ஏதோ இருக்கிறம்" எண்டு பதில் சொல்லுவினம்.

என்ன புதினம் எண்டு கேட்டால் 'எங்களுக்கு என்ன புதினம் தெரியப்போகுது வீடு வேலை எண்டு திரியவே நேரம்' சரி" எண்டு பதில் வரும்.

சில பேரைக்கண்டு என்னப்பா புதினம் எண்டு கேட்டால், 'நீங்கள் தான் புதினம் சொல்ல வேணும்" எண்டு கேட்ட கேள்வியை திருப்பி எங்களுக்கே விடுவினம்.

சரிதான் மனுசனுக்கு புதினம் தெரியாதாக்கும் எண்டுட்டு "சீட்டுக்கார சின்னத்துரை சீட்டை எடுத்துக்கொண்டு கனடாவிற்கு மாறிட்டானாம்" எண்டு சொன்னன்.

'ஓம், ஓம் போகேக்க சீட்டுக்கார சின்னத்துரை வட்டிக்கார வரதன்ர மனுசியையும் கூட்டிக்கொண்டு அல்லே போட்டான்' எண்டு இன்னொரு புதினத்தையும் சேர்த்து விடுவினம்.

இப்படியான ஆட்கள் தாங்கள் கேள்விப்பட்ட புதினம் உண்மைதானா எண்டு அறிய புதினம் தெரியாது எண்டு சொல்லி "புதினம் கேட்டு புதினம் விடுவினம்."

இப்படித்தான் பாருங்கோ எங்கட சிவத்தான் அப்பவே ஜேர்மனிக்கு வந்து. வந்த உடனேயே பேர்லின் போடர் திறந்து கிடக்கேக்க மனுசியையும் பிள்ளைகளையும் கொஞ்ச காசோட கூப்பிட்டு இப்ப நாலு ஐஞ்சு பிள்ளைகளும் பெத்து சோசல் காசோட சுகபோக வாழ்க்கை வாழ்ந்து கொண்டு இருந்தவன், இப்ப வந்த புது தமிழ் சனங்களிண்ட வாழ்க்கையை கண்டு ஒரு நக்கல் கதை விடுரவர் கண்டியலே. என்ன நக்கல் கதை என்று கேட்கிறியலே சொல்லுறன் கேளுங்கோ.

இப்ப வந்த புதுச்சனம் மனுசி, பிள்ளைகளை கூப்பிட வசதியில்லாமலும், கூப்பிட ஏஜென்சிகாரருக்கு காசுகட்டி அதுவும் இல்லாமல் சரியா கஸ்டப்பட்டு சொல்லவும முடியாமல் ஊருக்கு போகவும் முடியாமல் சோக வாழ்க்கையுடன் சிலபேர் வாழுகினம்.

இப்படி மனுசி பிள்ளைகளை விட்டு இவ்விடம் தனிய இருக்கிற எங்கட சனத்தை, உவன் சிவத்தான் தான் இங்க மனுசி பிள்ளைகளோட இருக்கிற துணிவில என்ன தெரியுமே சொல்லுவான் -

'மனுசனாய் பிறந்தவன் மனுசி பிள்ளைகளை விட்டுட்டு தனியவும் வாழுறது ஒரு வாழ்க்கையே' என்று நக்கல் விடுவான்.

இப்ப அந்த சிவத்தான் தனிய ஜேர்மனியில வேலை செய்து கொண்டு இருக்கிறான்.

மனுசி பிள்ளைகளை கனடாவிற்கு அனுப்பிப்போட்டு இங்க அவன் தனிய இருக்கிறதை கண்டிட்டு நான் அவனிட்ட கேட்டன் "என்னடாப்பா மனுசி பிள்ளைகளை விட்டுட்டு நீ தனிய இருக்கிற உதுவும் ஒரு வாழ்க்கையே?" எண்டு அவன்விட்ட கதையை அவனுக்கே விட்டன் பாருங்கோ.

அதுக்கு அவன் சொன்னான் "இங்க மனுசி பிள்ளைகளை இருக்கிறதால என்ன பிரயோசனம்? பிள்ளைகளிண்ட படிப்பும் வீண், அதோட எங்கட கலாச்சாரங்களை அதுகள் மறந்து போயிருங்கள். அதுதான் அவயலை கனடாவிற்கு அனுப்பிப் போட்டன், அதுக்கும் பேய் செயவு முடிஞ்சுது" எண்டான்.

எனக்கு இந்த கதையை கேட்க சிரிப்புத்தான் வந்தது பாருங்கோ.

எங்கட தமிழ் கலாச்சாரத்தை பழக கனடாவுக்கு அனுப்பின கதைகளை கேட்க சிரிக்கிறதோ, அழுகிறதோ நீங்களே சொல்லுங்கள் பார்ப்போம்.

"மனுசனாய் பிறந்தவன் மனுசியையும், பிள்ளைகளையும் விட்டுட்டு இருப்பானோ" எண்டு சொன்னது அப்ப!?

அப்ப இப்ப நடப்பது என்ன?

அதுக்கு ஒரு வியாக்கியமான கதையும் சொல்லுறாங்கள்.


'விழுந்த பக்கம் குறி சுடுர' பழக்கம் எங்கட இனத்திற்கு எப்படித்தான் வந்ததோ தெரியாது. முதலிலை இப்படியான வியாக்கின கதைகளை விட்டால்தான் ஈழம் கிடைச்சபின் எங்கட இனம் நல்லா வாழ வழிபிறக்கும் கண்டியலே.

இந்த முறை இந்த விசயத்தை உங்களோட கதைச் சுப்போட்டு போறதாலே என்ர சுமையை கொஞ்சம் குறைச்ச மாதிரி இருக்குது பாருங்கோ. எதுக்கும் அடுத்த முறை வேற விசயத்தோட வாறன்.

எல்லோருக்கும் மங்கலம் உண்டாகட்டும். ●

**'மனுசனாய் பிறந்தவன் மனுசியையும், பிள்ளைகளையும் ஊரில விட்டுட்டு இங்கை தனிய இருப்பான்களே' சொன்னது அப்ப! அப்ப இப்ப?**

டை அணிந்து கொள்வதற்கான இரு வழிகள்:



முதலாவது முறையை அடிப்படை முடிச்சு என்றும், இரண்டாவதை இராசமுடிச்சு என்றும் அழைப்பர்.

## சிரி.. சிந்தி!

உடைந்துபோன ஒரு மண் பானையின் கழுத்து பூமியில் கிடந்தது. வழிப்போக்கன் அதைக்கவனிக்காமல் மிதிக்கப்போனான்.

"மிதிக்காதே! மிதிக்காதே. நான் ஒரு பானையின் கழுத்து" என்று சத்தம் போட்டது அது.

வழிப்போக்கன் சிரித்தான். "இனி உனக்கென்ன வாழ்வு? உன்னை மிதித்தால் என்ன? உடைத்தாலென்ன? நீ இப்பொழுது பானையல்ல, உடைந்துபோன அதன் கழுத்து."

கழுத்து அதனைக்கேட்டுச் சிரித்தது.


"முன்பு நான் பானை. இப்பொழுது கழுத்து. நாளை மீண்டும் களிமண். பிறகு ஒரு புதிய பானை. ஆனால், நீ...?"

வழிப்போக்கன் யோசித்தான். அதைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டு தன் வழியே போனான்.

# போகிற போக்கில்..

-ஏ.ஜே.ஜி-

## ஓரங்கட்டப்படும் ஒலிவேகம்!



ஜெட் வேகத்தில் வளரும் விஞ்ஞானம் கையைக்கட்டிக்கொண்டு இருக்கத் தயாராக இல்லை. ஜெட் வேகத்தில் புதிது புதிதாகப் பலவற்றையெல்லாம் நமக்கு அறிமுகம் ஞுசய்தபடிதான் இருக்கின்றது.

ஜெட் என்ஜின் பொருத்தப்பட்ட கார் ஒன்று புயல்வேகத்தில் ஓடி சாதனையைப் படைத்து, முழு உலகையும் வியப்பிற்குள்ளாக்கி இருக்கின்றது.

ஒலியின் வேகம் என்பது காலநிலைக்கு ஏற்ப மாறக் கூடியது. அமெரிக்காவின் நெவாடா மாவட்டப் பாலைவனம் ஒன்றில் வைத்து ஒலியின் வேகம் மணிக்கு 748,111 (MPH) - (மை, ஒரு மணிநேரத்திற்கு) என்று கணிக்கப்பட்டது.

பிரிட்டனின் விமான சேவையில் பைலட்டாகப் பணியாற்றும் அண்டி கிரீன் என்பவர் ஜெட் என்ஜின் பொருத்தப்பட்ட காரை முதற்தடவை 759,333 MPH வேகத்தில் ஓட்டிச்சென்று சாதனை படைத்தார் இவர். இரண்டாம் தடவையும் இவர் காரை ஓட்டி முன்னையதை மிஞ்சும் வேகத்தில் (766,109 MPH) ஓடி தன் சாதனையைத் தானே முறியடித்திருக்கிறார்.

50 வருடங்களுக்கு முன்பு ஒலியின் வேகத்தை மிஞ்சும் விமானம் விண்ணில் பறந்து சாதனை படைத்தது. இந்த விமானத்தை ஓட்டியது CHUCK YEAGER என்பராவார்.

கடும் வேகம் கண்ணைக் டுக்காவிடில் சரிதான்!

## பழையதும் புதியதும்

1953 1975



Winsome Poised

1998 இல் பிரிட்டனின் இராணி எலிசபெத்தின் உருவம் பொறித்த புதிய 5 பவுண்ட்ஸ் நாணயம் பாவனைக்கு வரப்போகின்றது. தற்பொழுது புழக்கத்திலுள்ள

1985 1998



Elegant "Realistic"

நாணயம் 1985 இல் அச்சிடப்பட்டது. அவரின் பழைய புதிய கோலங்களை, நாணயங்கள் பளிச்செனக் காட்டுகின்றன. தலையில் இருக்கும் முடியின் கோலம் கூட மாறித்தான் இருக்கின்றது.


## "இளைஞன்" சந்தா விபரம்:

ஒருவருடம் சகலநாடுகளுக்கும்
தபாற்செலவுடன் 15 DM மட்டுமே!
சந்தா அனுப்பவேண்டிய முகவரி:

'ELAIGNAN'
BANK: Dresdner Bank
Ko. Nr: 273022401
BLZ: 500 800 00
Frankfurt/M - Germany






Foto: W. Barth

"உங்கள்"
இளைஞன்
பற்றிய சகல தொடர்புகளுக்கும்,
சகலவிதமான ஓவிய வேலைகளுக்கும்,
தரமான அச்சுப்பதிப்புகளுக்கும்
தொடர்பு கொள்ளுங்கள்.
24 HOURS SERVICES CALL: 0172 - 4189964
24 மணிநேரமும் தொடர்பு
கொள்வதற்கு அழைக்க வேண்டிய
தொலைபேசி இல. 0172 - 4189964
ELAIGNAN
Ginnheimer Str, 24 A
60487 Frankfurt/M
Germany

# அறிவியல் உலகம்

சீனாவில் 800 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு பெரிய சுவர் பூமிக்குள் புதைந் திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஐயாயிரம் கி.மீ. நீளமுள்ள இந்த சுவர் கி.பி. 1123-1198-ல், ஜின் அரசை உருவாக்கிய சீனப் பழங்குடிகளால் கட்டப்பட்டிருக்கலாம் என்று கண்டுபிடிப்பாளர்கள் கருதுகிறார்கள். மங்கோலியாவில் ஒரு சுதந்திர அரசின் மதில் சுவராக இருந்த இதில் கோபுரங்கள், கோட்டைகள் போன்றவையும் உள்ளனவாம். கடந்த டிசம்பர மாதம் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பலூனை காற்றில் பறக்க விட்டால் நமக்கெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கும் இல்லையா? ஆனால் ஜப்பான் நாடு பலூன் பறந்தாலே பயப்படுகிறது ஏன்? வடகொரியா ரசாயன ஆயுதங்கள் மூலமாக ஜப்பானைத் தாக்க திட்டமிடு கிறதோ என்றுதான். ஏழு மீட்டர் நீளமுள்ள பலூன்கள்கூட கொரியாவி லிருந்து ஜப்பானுக்கு காற்றில் மிதந்து வருகிறது. வடகொரியா ரசாயன விஷ வாயுக்களை நிரப்பி தென் கொரியா மீது பல ஆண்டுகளாக ஏவி வருவதாக நம்பப்படுகிறது. சமீபத்தில் ஜப்பானின் தரையிறங்கிய பலூன் களில் விஷ வாயுக்களும், சிறிய கருவிகளும் இருப்பது தெரிய வந்திருப்பதால், காற்றில் இந்த நச்சுக் காற்றுக்கள் கலக்கப்பட்டு ஜப்பானுக்கு சேதாரம் விளைவிக்கக் கூடும் என்றும் கருவிகள் அதிக ஆபத்தை விளைவிக்கக் கூடியவையாக உள்ளன என்றும் ஜப்பான் தெரிவித்திருப்பதை இது கட்டுக் கதை என்று கொரியா மறுத்துள்ளது!

ஐரோப்பிய நாடுகளிலேயே அதிகம் கொழுப்பு உணவு சாப்பிடுபவர்கள் பிரான்சு நாட்டினர். ஆனால் அவர்களுக் குத்தான் ஐரோப்பாவிலேயே மிகக் குறைவான மாரடைப்பு வருவதாக ஒரு சர்வேயில் தெரிய வந்துள்ளது. பிரான்சின் 80 சதவிகித மக்கள் உணவுடன் திராட்சைரசம் (மது) அருந்துவதுதான் இதற்குக் காரணம் என்று சர்வே எடுத்த மதுபானக் கம்பெனி கூறுகிறது. இது விற்பனைத் தந்திரமா? உண்மையா என்று புரியாமல் தவிக்கிறார்கள். அப்பாவி மக்கள்!

உலக வரலாற்றில் 'ஆறு நாள் போர்' என்று அழைக்கப்படுவது எது தெரியுமா? 1967-ல் இஸ்ரேல் நாடு ஒரே சமயத்தில் எகிப்து, ஜோர்டான் நாடுகளின் மீது போர் தொடுத்து ஆறு நாட்களில் வென்றது! இதுவே 'ஆறு நாள் போர்' எனப்படுகிறது.

ஒரே ஒரு கொலையில் ஒரு ஊரோ, நகரமோ, நாடோ பாதிக்கப்படலாம். ஆனால் உலகமே பாதிக்கப் பட்டிருக்கிறதா? ஆம். தனிமனிதக் கொலையால்தான் முதல் உலகப் போரே மூண்டது. செர்பிய நாட்டுக் காரன் ஒருவனால் ஆஸ்திரிய இளவரசர் பெர்டினன்ட், 28-06-1914-ல் கொலை செய்யப் பட்டார். இதுவே உலகப்போர் மூலகாரணமாயிற்று!


பென்சில் வேனியா பல்கலைக் கழகம் நடந்த ஆராய்ச்சியில் பின் வரும் தகவல் தெரிய வந்துள்ளது ஆபத்துப் பிரிவில் சேர்க்கப்படும் நோயாளிகள் விரைவாக இறந்துவிட வேண்டுமென்று ஐந்தில் ஒரு நர்ஸ் வீதம் நோயாளிகளின் மரணத்தை துரிதப்படுத்துகிறார்கள். இதற்குக் காரணம் நோயாளிகள் தாங்க முடியாத வலி மற்றும் வேதனையிலிருந்து ஆறுதல் பெறுவதற்காகவாம்!

வாசகர்களிடமிருந்து ஆரோக்கியமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.
(ஆ-ர்)




முதன் முதலில் செயற்கைகோள் வழியாகப் பெறப்பட்டு, தொலைக்காட்சியில் அமைந்த செய்தி, "கோலான் ஹைட்ஸ்" -ல் ஏற்பட்ட படை விடுப்பு, சிரியன் -இஸ்ரேல் ஒப்பந்தம் பற்றி ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்சன் ஆற்றிய உரையாகும்.

## கவியரசின் 'கணக்கே' தனி!



**'எண்ணிரண்டு பதினாறு வயது அவள்**
**கண்ணிரண்டில் ஆடுதம்மா காதல்**
**கொண்ட மனது'**


என்று கவியரசர் கண்ணதாசன் பாடலை எழுதிக் கொடுத்தார்.
தயாரிப்பாளர் கவியரசரிடம், "இன்றைக்கு உள்ள எந்தக் கதாநாயகிக்கு பதினாறு வயது... எல்லாக் கதாநாயகிகளும் முப்பது வயதுக்குமேல் ஆனவர்கள் ஆச்சே...!" என்றார்.
கவியரசர் சிரித்துக்கொண்டே நானும் அதைத்தான் எழுதியிருக்கிறேன் என்றார். தயாரிப்பாளர் வியப்புடன் பார்த்தார்.
கவியரசர், "எண்ணி, இரண்டு பதினாறு வயது என்றால் முப்பத்திரண்டு வயது ஆகிறது அல்லவா!" என்றார்.
தயாரிப்பாளர் அசந்து போனார்.

## சும்மா ஜொக்கு நேரம்

'சக்தியும் சிவனும் சரசமாடுகின்றன' என்றார் வேதாந்தி.
பல்பை அணைத்துக் காட்டினார் விஞ்ஞானி.
'அவர்கள் தூங்குகிறார்கள், தொல்லை செய்யாமல் வீட்டுக்குப்போம்' என்றார் வேதாந்தி.

'வேதாந்தம் பெரிதா? விஞ்ஞானம் பெரிதா?' என்று இருவருக்குள் சர்ச்சை எழுந்தது.
'வேதாந்தமே பெரிது' என்றார் ஒரு வேதாந்தி.
'விஞ்ஞானமே பெரிது' என்றார் ஒரு விஞ்ஞானி.
இரண்டு மின்சாரக் கம்பிகளைப் பொருத்தி பல்பை எரிய வைத்துக் காட்டினார் விஞ்ஞானி.

வகுப்பிலே பாடம் நடந்து கொண்டிருந்தது.
'இந்தியாவில் மொத்தம் எத்தனை மொட்டை மரங்கள் இருக்கின்றன?' என்று கேட்டார் ஆசிரியர்.
மாணவர்கள் திகைத்தார்கள்.
ஒரேயொரு மாணவன் திடீரென்று எழுந்து 'தொன்னூற்றி ஐந்து கோடி ஐயா' என்றான்.
'எப்படி உன்னால் அத்தனை திட்டவட்டமாகச் சொல்ல முடிந்தது?' என்று கேட்டார் ஆசிரியர்.
மாணவன் சொன்னான்: 'நேற்றுத்தான் நம் ஜனத்தொகை பற்றிய புள்ளி விபரம் வந்திருக்கிறது!' என்றான் மாணவன்.






**தும்மலுக்கு சிறை!**

*சிறைச்சாலையில் இரண்டு கைதிகள் பேசிக் கொண்டார்கள்.*

*"நீ ஏன் இங்கு வந்தாய்?"*

*"தும்மினேன் அதனால் தான்."*

*"தும்மியதற்கா சிறையில் போட்டாங்க?"*

*"ஆமா. ஒரு வீட்டில் பீரோவை கள்ளச் சாவி போட்டு திறக்கிறப்போ தும்மல் வந்திருச்சி!"*

**இது எப்படி இருக்கு!**

**ஒரு இளம்பெண்ணிடம் ஜேப்படி செய்ததாக வழக்கு. நீதிபதி கேட்டார்– "உன் இரவிக்கைக்குள் அவன் கைவிட்டதும் நீ ஏன் கூச்சல் போடவில்லை?"**

**"இளம் பெண் சொன்னாள்: "உள்ளே இருந்த பர்சை எடுக்கத்தான் அவன் கைவிடுகிறான் என்று நான் நினைக்கவில்லை!"**

## அப்பா! அப்பப்பா!!

அப்பா: உன்ரை அப்பப்பா செய்த தவறாலே எங்களுக்கு நாடு இல்லாமல் போச்சுது மகனே.

மகன்: அப்பப்பா செய்த தவறாலே உனக்கு நாடு தான் இல்லை. அப்பா நீ செய்த தவறால் எனக்கு நாடும் இல்லை மொழியும் இல்லை!

அப்பா: !!!???

சுவிஸ் அகதியார்

## சரஸ்வதி பூஜை

ஆசிரியர்: சரஸ்வதி, லக்சுமி, துர்க்கா இவர்கள் மூவரும் யார்?

மாணவன்: நக்மா, ரம்பா, குஸ்பூ போன்ற பெண்கள் தான் சேர்.

ஆசிரியர்: ???!!!

சுவிஸ் அகதியார்

**இளைஞன் ஒரு ஜனரஞ்சகமான பல்சுவை இதழ்**

## செவிடர்கள் சேர்ந்தால்...

1 ம் செவிடன்: எங்க அண்ண வாளியோட போறியள் குளிக்கவே?

2 ம் செவிடன்: இல்லை நான் குளிக்கப் போறன்.

1 ம் செவிடன்: நீங்கள் வாளியோட போக நான் நினைச்சன் குளிக்க போறியளாக்குமெண்டு.

சுவிஸ் அகதியார்

*ஒரு படத்தில் கதாநாயகனும், கதாநாயகியும் முத்தம் கொடுக்கிற காட்சி படமாகிக்கொண்டிருந்தது.*

*கதாநாயகனாக நடித்தவர் ஒவ்வொரு முறை கதாநாயகிக்கு முத்தம் கொடுத்து முடிக்கும் போதும் ஏதாவது தவறு செய்து விடவே, அக்காட்சியை அதிகமான டேக்குகள் எடுத்துக்கொண்டிருந்தார்கள்.*

*இயக்குனர் எரிச்சல் அடைந்து "இந்த காட்சிக்கு இத்தனை டேக்கா? இந்த முறையாவது சரியாக செய்யுங்கள்" என இரைந்தார்.*

*கதாநாயக நடிகரோ, "சார் கொஞ்சம் அதிக டேக் ஆகிவிட்டாலும், காட்சி நன்றாக அமைவது முக்கியமில்லையா?" என்று கேட்டார்.*


*அதைக்கேட்ட இயக்குனர், "அதற்காக இந்த முத்தக் காட்சிக்கு இத்தனை டேக் எடுத்தால், பிலிமே நனைந்து போகும் சார்" என கத்தினார்.*

***கணவனும் மனைவியும் திருவிழாவிற்குப் போயிருந்தார்கள். கூட்ட நெரிசலில் மனைவி காணாமல் போய்விட்டாள்.***

***கணவன் போலிசில் புகார் செய்தான். பத்திரிகையில் விளம்பரம் செய்தான். மனைவி கிடைக்கவில்லை.***

***இராமர் கோவிலுக்குச் சென்று மன முருக வேண்டினான். 'காணாமல் போன மனைவி கிடைக்க அருள் புரியுங்கள்!'***

***உடனே இராமர் பேசினார்: 'இதே சாலை வழியாகப் போனால் அனுமார் கோவில் வரும். அங்கு போய் வேண்டிக்கொள். என்னுடைய மனைவியைத் தேடிக் கண்டுபிடித்தது அவர்தான்!'***












# வாத்துக் குஞ்சு

இணுவை நவீன்

அம்மாவின் சேலைத்தலைப்பைப் பற்றியபடி வெயிலிலே வியர்க்க நடக்கிறான் அந்தச்சிறுவன். சொந்த மண்ணிலேயே ஆதரவற்று நிற்கும் அகதிகளில் அவர்கள் குடும்பமும் ஒன்று. "செல்"லிற்கும் மார்கழி கழைக்கும் இடையே போராடும் உயிர்ப்பறவைகள். பறக்க நினைக்கையில் எங்கே இறக்கைகள் வெட்டுப்படுமோ என்ற அபலைகள். உயிரைக் கொல்லும் பசி ஒருபுறம், வாழ்க்கையின் ஓரத்தே துரத்தும் மரணபயம் முறுபுறமாக மக்கள் வெள்ளம் எங்கேயோ ஓடிக்கொண்டிருக்கிறது.

காடுகள் தோட்டங்களூடே புதிதாக முளைத்த குறுகிய பாதைகளில் மக்கள் நெரிசலூடே அவன் அம்மா கோமளா இவனை ஒரு கையிலும் மறுகையில் லாவண்யா என்கிற மறுபிள்ளையையும் இழுத்துக்கொண்டு நடக்கிறாள். நெடுந்தூரம் நடந்ததில் கால்கள் வலித்தன.

"அம்மா என்னால் நடக்க ஏலாது."

"என்ரை குஞ்சல்லே, இன்னும் கொஞ்சத் தூரத்திலை சாவகச் சேரி வந்திடும். சாப்பிட ஏதாவது தாறன்."

"போ... முடியாது" அவ்விடத்தை இருந்தவனுக்கு பசி என்பது அவளுக்குப் புரியாமலா போகும். ஓர் ஓரத்தே சென்று அமர்ந்து கொண்டார்கள். பிஸ்கட் பாக்கெட்டைப் பிரித்து பிள்ளைகளிற்குக் கொடுத்து விட்டு தண்ணீர் மட்டும் குடித்தாள்.

"ஏனம்மா உங்களுக்கு பசிக்கேல்லையே" சின்னவளின் கேள்வியில் ஒரு கணம் சந்தோஷப் பட்டாள்.

அவளின் கன்னத்தை வருடியபடி,

"பசி இல்லை" என்று மொட்டையாக முடித்தாள்.

தொடங்கிய வேளை சூரியன் தனது வெப்பத்தைக் குறைத்துக் கொண்டது போல் மாலை நேரமாகியது. சிலர் தங்கள் குடும்பத்தோடு சைக்கிளில் சென்று கொண்டிருந்தனர்.

"ஏனம்மா அப்பா இருந்திருந்தா நாங்களும் கஸ்ரப்படாம போயிருக்கலாம்... இல்லையாம்மா" ஏக்கத்தோடு கேட்ட ரமேஷை ஒரு கணம் உற்றுப் பார்த்தவள் கண்களில் நீர்க் கோடு.

"பாவிகள் அவரை விட்டு வைக்கேல்லையே" வெளிப்பட்ட கண்ணீரை வெறுப்புடன் துடைத்துக் கொண்டாள்.

வீரப்புலியைச் சுட்டதாக நினைத்த அந்தக் கூட்டத்து நாய்கள் ஒரு குடும்பத் தலைவனைச் சுட்டுவிட்டோம் என்று தெரிந்தும் வருத்தம் தெரிவிக்காதது கொடுமையின் உச்சக்கட்டம். எண்பத்தி எட்டாம் ஆண்டு அமைதி காப்பதாய்க் கூறிக் கொண்டு அராஜகம் செய்த போது வினை விதைப்பவன் அதனை அறுவடை செய்தே ஆக வேண்டும் என்பதை தொண்ணூறாம் ஆண்டு கண் குளிர மனது நிறையப் பார்த்தாள், கேட்டாள்.

"இதைவிட சிங்களவன் மேல்" என நினைக்க வைத்த விதவைக் கோலம் இன்னும் தொடரான சாபங்களைப் பெற்று விட்டது போல் முடிவுறாமல் போகிறது.

யாழ்ப்பாணத்தில் ஆமி மிகுந்த கட்டுப்பாடோடு நடக்கிறது என்று தமிழ் அரசியல்வாதியொருவர் பத்திரிகைக்குப் பேட்டி கொடுத்ததை யாரோ சொல்லக்கேட்டு நெஞ்சு வேகிறது. இவர்கள் எல்லாம் ஆள வந்தால் ஹிட்லர் மேலானவர் என மக்கள் எண்ணும் நிலை தோன்றும் என்று எண்ணியபடியே நடக்கிறாள்.

திடீரென நடப்பதை நிறுத்திய ரமேஷ் "ஏனம்மா என்ரை வாத்துக் குஞ்ரை திறந்து விட்டியாம்மா" எனக் கேட்டபடி அவளின் பதிலை அவசரமாக எதிர்பார்த்தான். அவளின் மௌனம் இல்லை என்ற பதில் இருப்பது புரிந்து போனது.

"என்ரை வாத்து செத்துப் போயிடுமேம்மா"

தொடர்ச்சி 23 ம் பக்கம்



# இனிய வாழ்வுக்கு எளிய திருமணம்!





புலவரும், நண்பரும் வந்து கொண்டிருந்த வழியில் அவர்களைக் கடந்து ஒரு பெண்மணி சென்று கொண்டிருந்தார். அந்த பெண்மணியை கவனித்த நண்பர் மெல்ல புலவரிடம் பேச்சுக் கொடுத்தார்.

“அய்யா, இப்போது எதிரே சென்ற பெண்மணியை தங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? பத்து வருடங்களுக்கு முன்பு அவர் திருமணம் பெரும் கோலாகலமாக நடந்தது. இந்த பெண்மணிக்கு செய்த சீர், செனத்தி மாதிரி சமீப காலத்தில் எந்த பெண்ணுக்கும் செய்ததில்லை என்று அப்போது பேசிக் கொண்டார்கள். அப்படி சீரும், சிறப்புமாய் இருந்த இந்தப் பெண்மணி இப்போது கழுத்திலும், காதிலும் எந்த நகையுமில்லாமல் செல்வது ஆச்சரியமாக இருக்கிறதே!” எனக் கூறினார்.

இதற்கு புலவர் தந்த விளக்கம் பின்வருமாறு:-

‘உங்களுக்கு ஒரு உண்மை தெரியுமா? திருமணங்கள் மிகவும் படாடோபமாக செய்யப்பட்டு வாழ ஆரம்பிக்கும் தம்பதிகளின் வாழ்க்கை பிற்காலம் அவ்வளவு சுகபோகமாக அமைவதில்லை. அதேசமயம் திருமணங்கள் எளிமையாய் நடந்து வாழ்வில் இணைந்த மணமக்களோ பிற்கால வாழ்க்கையில் அமோகமாக இருந்திருக்கிறார்கள். இப்படியொரு நியதி வாழ்க்கையில் இருப்பதை அநேகர் கவனித்திருக்கலாம். இதோ இந்தப் பெண்மணி மாதிரி எனக்கொரு அம்மாவைத் தெரியும். அவருக்கு திருமணமாகிற காலத்தில் முன்னூறு பவுன் நகை அந்த பெண் வீட்டார் போட்டார்கள். ஏராளமான பொருள்களை சீதனமாக வழங்கினார்கள். ஆனால் பத்து, பதினைந்து ஆண்டுகளில் குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்காக அவள் சீதனமாக கொண்டு வந்த எல்லாப் பொருள்களும், நகைகளும் அவரை விட்டுப்போய் விட்டன.

அதேசமயம் இன்னொரு பெண்மணியை எனக்குத் தெரியும். திருமண சமயம் அந்த பெண்ணின் குடும்பத்துக்கு ஏற்பட்ட பிரச்சினைகளால் அந்த பெண்ணுக்கு சாதாரணமாய் செய்ய வேண்டியதையும் செய்ய முடியாமல் திண்டாடினார்கள். கல்யாணம் எப்படியோ நடந்து முடிந்தது. ஆனால் பின்னாளில் அந்தப்பெண் கார், பங்களா, என்று எல்லா வசதிகளும் வாழ்வில் பெற்று வாழ்ந்து வருகிறார்.

பொதுவாக மற்றவர் மனதை ஏங்க வைப்பது மாதிரி நமது ஆடம்பரங்களை வெளிப்படுத்தக் கூடாது. மற்றவர் ஏங்கி ஏங்கி பெருமூச்சு விடுவது, சம்பந்தப்பட்டவரை ஏதோ ஒரு வகையில் பாதிக்கிற மாதிரி சம்பவங்கள் நடந்துவிடுகின்றன. எனவேதான் திருமணம் போன்றவற்றை மிக ஆடம்பரமாக நடத்துவதை அனுபவமுள்ள மனிதர்கள் விரும்புவதில்லை. திருமணம் என்ற பெயரில் ஆயிரக்கணக்கான ஏழை, எளியவர்களுக்கு நல்ல சாப்பாடு போடலாம். அதனால் தப்பில்லை. ஆனால் எல்லோரும் பார்த்து மனதுக்குள்ளேயே புழுங்குவது மாதிரி ஆடம்பர காட்சியாக திருமணங்களை வைத்துக் கொள்ளக் கூடாது. பெண்ணின் நகையும் பட்டுச்சேலையும் பற்றியே எல்லோரும் பேசிக் கொண்டிருக்கிற மாதிரி டாம்பீகத்தை காட்டக் கூடாது.

பொதுவாக நமது வீடுகளில் நகை போன்றவற்றையே மிகப்பெரிய விஷயமாக பேசி பேசி எல்லாப் பெண்களையும் நகைப் பைத்தியமாகவே வளர்த்து விடுகிறார்கள். ஒரு பொது இடத்தில் இரு பெண்கள் சந்தித்துக் கொள்கிறார்கள் என்றால் அந்த சந்திப்பில் இருவரும் சிரித்துப் பேசிக் கொண்டிருப்பது மட்டும்தான் நமக்குத் தெரியும். அதற்குப்பின் அந்த இரண்டு பெண்களையும் தனித்தனியே சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தால் அவர்கள் அந்த சந்திப்பு பற்றி பேசவதே வித்தியாசமாக இருக்கும்.

‘போன தடவை அவளை நான் பார்த்தபோது ஒரு காப்புகூட அவ போடலை. இப்போ என்னடான்னா கை நிறைய காப்பு வைர மூக்குத்தி எல்லாம் போட்டிருக்கா! எப்படித்தான் பணம் வந்ததோ!’ என்று பெருமூச்சு விட்டுக் கொள்வாள் ஒரு பெண்!

அதேமாதிரிதான் இன்னொரு பெண்ணும் விமர்சிப்பாள். ‘போன தடவை இவளை பார்க்கும்போது ஒரு அட்டிகை போட்டிருந்தா. இப்ப அதைக் காணோம். வித்திருப்பா போலிருக்கு. அவ பேச்சுலேயும் போன தடவை பார்த்த மாதிரி அந்த மிடுக்கு ஒண்ணும் இல்ல என்கிற மாதிரிதான் விமர்சிப்பாள்..

ஆனால் நேரில் இந்த இரு பெண்களையும் சேர்த்து பார்த்தபோது சிரித்து சிரித்துத்தான் பேசிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் வாய்தான் சிரித்து பேசியதே தவிர அவர்கள் கண்ணோட்டம் முழுவதும் உடம்பிலே ஏதாவது தங்கம் இருக்கிறதா? வசதியாக இருக்கிறாளா இல்லையா? இந்த கவனிப்பிலேயே இருந்திருக்கும்.

இப்படி ஒரு மனோ பாவத்தை நம் பெண்களிடம் அதிகமாக வளர்த்து விட்டிருக்கிறோம். அவர்களால் எதையும் தாங்க முடியும். ஆனால் தனக்குத்தெரியு இன்னொரு பெண்மணி நகையும் பட்டுமாய் காட்சியளித்தால் தாங்குவது மிகவும் சிரமம்.

தமிழகத்திலேகூட முன்னாள் முதல்வரான பெண்மணி ஒரு ஆடம்பர திருமணத்தை நடத்தியதுதானே அவருக்கு எல்லா வகையிலும் துன்பம் வர முதற்காரணமாய் அமைந்தது. அதிலும் அவர் உடன்பிறவா சகோதரி கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பில் நகைக்களை உடம்பில் பூட்டி வந்திருந்ததை பத்திரிகைகள் மூலமாக தமிழக பெண்கள் பார்த்துவிட்டு அவர்களால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் போனதன் விளைவுகள்தானே இன்று நம் கண்முன்னே நடந்துகொண்டு இருக்கின்றன.

எனவே, பிறரை ஏங்க வைக்கிற மாதிரி ஆடம்பரமாக தெரிகிற எந்த செயலையும் யாரும் செய்ய துணியக் கூடாது என்பதையே இவையெல்லாம் உணர்த்துகின்றன.

என்றார் புலவர்.

# இளைஞர் களம்

கடந்த இதழில் காதல் வலையில் சிக்கிவிடத்துடிக்கும் இளைஞர்களுக்காக அப்துல் ரகுமானின் கவிதை ஒன்றை பிரசுரித்திருந்தோம் அல்லவா...
அதைச்சாடி இங்கே ஒரு வாசகி, ஆண்களை குற்ற வாளிக் கூண்டில் ஏற்றுகிறார்.

## யார் குற்றம்?

வண்டினை நாடி மலர்கள்
சென்றதாய்
சரித்திரம் உண்டா?
ஒத்த முனைகள் காந்தம்
தன்னில் ஒட்டியதுண்டா?

மயிலில் பெண்ணினம் -
தோகை
விரித்து ஆடியதுண்டா?
பெண் குயில் என்றும் - ஆண்
குயிலை கூவி அழைத்த
துண்டா?

இவை இயற்கையின் விதிகள்
புரிகிறதா? - ஆணே
பெண்ணை தேடி வருவதும் -
அடிமை
என்று தன்னை நினைப்பதும்
ஏவல் வேலை புரிந்து நிற்ப
தும்
"எஜமான்" என்று அவளை
நினைப்பதும்
காத்திருந்து தாடி வளர்ப்ப
தும் - தோற்றால்
மதுவை நாடிச் செல்வதும்

ஆணே! இயற்கையின் நிய
தியை மீற முடிந்தால்....

மாற்றிக் கொள்ளுங்கள் - உங்
களை
தேடி பெண்களே நாடி வரச்
செய்யுங்கள்!
அடிமை என்னும் மடமை
எண்ணம்
விட்டுத் தள்ளுங்கள்!

தாடியும், மதுவும் வேண்டாம்
என்று சத்தியம் செய்யுங்கள்!
புத்தம் புதிய யுகத்தை
அமைத்து
நிமிர்ந்து நில்லுங்கள்!

மாற்றம் உண்டா? - இயற்கை
விதியில் மாற்றம் உண்டா? -
மாற்ற
முடிந்தால் மாற்றுங்கள் -
இல்லை
உங்களை நீங்களே தேற்றுங்
கள்!

-மீனா செல்வரட்ணம்,
கனடா

### தூதுவன்...

ஒரு பெண்ணைக் காதலித்து, கைவிட்டு, அப்புறம் வேற ஒருத்தியை LOVE பண்ணி, அவளையும் தலைமுழுகி, இன்னொருத்தி பின்னாலே திரிந்து -இப்படியே பிழைப்பு நடத்திட்டிருக்கிற புண்ணியவானை "மலருக்கு மலர் தாவும் வண்டு" என்று வர்ணிப்பாங்க நம்ம மூத்தவங்க! பொம்பளைங்களை மலரென்று வர்ணிக்கிறது O. K..! ஆனா, வண்டு என்னங்க பாவம் பண்ணிச்சு? ஒரு மலருக்கும் இன்னொரு மலருக்கும் இடையே மகரந்தச் சேர்க்கை ஏற்பட - அதாவது ஒரு காதல் தூதுவனாத்தாங்க வண்டு செயல் படுது. அதைப்போய் ஒரு காமாந்தகனோட ஒப்பிடறது சரியா? இனியாவது உதாரணம் கொடுத்துப் பேசறதுக்கு முன்னாலே கொஞ்சம் உஷாரா இருங்க!

(நன்றி: ஆ. வி.)

அம்மா... மீனாக்கண்ணு இப்படித்தான் தங்கள் மற்றைய உதாரணங்களும் இருக்குமோ...? (ஆ-ர்)

## மின் மினிகள்!

**- கற்கி -**

திடீர் பணக்காரனாக
வேண்டுமா?
களவு எடாதீர்கள்,
பொய் பேசாதீர்கள்,
கொள்ளை அடியாதீர்
கள்.
பேசாமல் மருமகனாகி
விடுங்கள்!

இரவல் ஒளி வாங்கி ஒப்
பனை செய்து திரிகிறாள்
ஓர் அழகான பெண்.
நிலவு!

நெருப்பு நடனங்களால்
மேடை அதிர்கிறது.
பூமி நடுக்கம்!

பொருட்கள் எத்தனை
வண்ணங்கள்
ஆனாலும்,
நிழல்களின் நிறங்கள்
கறுப்பு!

நிர்மலமான ஆகாயம்
எங்கும்,
கறைகள்.
நிலவு, நட்சத்திரங்கள்!

வறுமைதான் தீர்ந்தபா
டில்லை
உற்பத்தி பெருகிக்
கொண்டே இருக்கிறது.
சனத்தொகை!

சுயநல விரும்பிகளும்,
அறிவிலிகளும்
போற்றி வளர்க்கிறார்
கள்.
தனி நபர் வழிபாடு!

பருவமழை பெய்து பாத்
திரங்கள் நிறைந்தது.
அவர்கள் பசியோடுதான்
இருக்கிறார்கள்.
கூரை ஒழுக்கு!


நான் வள்ளலாகவும்
இருந்தேன்.
உனக்காக மட்டும்.
அன்பு செலுத்துவதில்!

நிலவுக் காதலியை
பிரிந்த
முகில்க் கணவனின் கண்
ணீர்
மழை!

நிலவு மங்கையின் கறுப்பு
ஆடையில்
எங்கும் பொத்தல்கள்.
நட்சத்திரங்கள்!



# பெண்ணுலகம்





## பெண்மையைப் பற்றி அண்ணல் காந்தியடிகள் கருத்துக்கள்

- வாழ்க்கையில் உள்ள தூயவை, மதம் பற்றியவை ஆகிய அனைத்திற்கும் உறைவிடம் பெண்கள்.
- பெண் என்பவள் ஆடவன் குறைகளைப் பூர்த்தி செய்து அவனால் ஆகாததைச் செய்யவே பிறந்தவள்.
- பெண்களின் நிலை உயரும்போது தான் ஆண்களின் நிலையும் உயரும். இவ்விருவரின் நிலையும் உயரும் போது மனித சமுதாயத்தின் நிலையே உயர்ந்து விடும்.
- ஆண்களை விட பெண்களுக்குத்தான் அன்பும், சகிப்புத் தன்மையும் அதிகம்.
- மனித இனத்தின் இளம் பயிரைக் காப்பாற்றி வளர்க்கும் தனி உரிமையும் பெருமையும் பெண்ணைச் சார்ந்தது. அவளது கவனமில்லையேல், மனித இனமே வாடி வதங்கி மடிய வேண்டி... ...ன்.
- தியாகமே உருவானவள் பெண். அவள் முறையாகச் செய்தால் மலையையும் நகர்த்தி விடுவாள்.
- பெண்ணின் கருணை உள்ளம் இன்னலைப் பார்க்கும்போது உருகி விடும்.
- பெண் இனத்தைக் காப்பாற்றும் சக்தியில்லாத ஒரு சமூகத்திற்கு திருமணம் செய்து கொள்ளவோ வம்ச விருத்தி செய்யவோ அருகதை கிடையாது.
- பெண்ணே அகிம்சையின் அவதாரம்.. என்று நான் சொன்னதுண்டு. அகிம்சை என்றால் எல்லையற்ற அன்பு. அதற்கு எவ்வளவு துன்பம் வரினும் ஏற்கும் ஆற்றல் உண்டு. ஆடவனைப் பெற்றெடுக்கும் தாயான பெண்ணைத் தவிர வேறு எவருக்கு இவ்வாற்றல் இருக்கும்?

# தாய் தரு... தாய்க்கும் நல்லது!



### இயற்கை உணவு

தாய்ப்பால்தான் குழந்தைகளுக்கு இயற்கை உணவு.

குட்டி போடும் ஒவ்வொரு மிருகமும் தன் குட்டிக்கு தன் பாலையே கொடுக்கிறது. மனிதன் (பெண்) மட்டுமே புட்டிப்பால் கொடுக்கிறான்!

தாய்ப்பால் என்பது இயற்கையான உணவு மட்டுமல்ல; குழந்தைகளின் முதல் உணவும் அதுவே. குழந்தை நலத்துக்கும், உடல் வளத்துக்கும், உடல் பலத்துக்கும் வேண்டிய எல்லா சத்துகளும் தாய்ப்பாலில் உள்ளன. குறிப்பாகக் குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு ஆற்றலை தாய்ப்பால் தருகிறது.

### செலவு இல்லாதது

தாய்ப்பால் செலவு இல்லாதது.

பால் தூள் வேண்டும்– வெந்நீர் வேண்டும்– பாட்டில் வேண்டும் என்று தேடவேண்டியது இல்லை. எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் உடனே தாய்ப்பாலைக் கொடுக்க முடியும்.

### தாய்க்கும் நல்லது!

தாய்ப்பால் கொடுப்பது குழந்தைக்கு மட்டுமல்ல; தாய்க்கே கூட மிகவும் நல்லது.

தாய்ப்பால் கொடுக்கும் பொழுது, தாய் தானே மெலிகிறாள். மார்பகம் பழைய நிலைக்கு வருகிறது. இயற்கையான கருத்தடையாகவும் அமைகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு பெரிய நன்மை இருக்கிறது. தாய்ப்பால் கொடுக்காத பெண்களுக்கு மார்புப் புற்று நோய் வருகிறது. தாய்ப்பால் கொடுக்கும் பெண்களுக்கு மார்பில் புற்று நோய் வருவது இல்லை.

### அழகு குறையாது

தாய்ப்பால் கொடுத்தால் அழகு குறையும் என்ற அச்சத்துக்கே இடமில்லை. மார்பகத்தை இயற்கையான அழகுக்குக் கொண்டுவர இப்பொழுது எவ்வளவோ வழிகள் இருக்கின்றன. உடலையும் கட்டுக்குலையாமல் வைத்துக்கொள்ள முடியும்.

தாய்ப்பால் கொடுப்பதை அநாகரிகமாகக் கருத வேண்டியது இல்லை. அது இயற்கையான ஒன்று. பெண்களுக்கு மார்பகம் இருப்பது அழகுக்காக அல்ல; குழந்தைகளுக்குப் பால் கொடுக்கத்தான்.

வேலைக்குப் போகும் பெண்கள், குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுக்க முடிவதில்லை. மறைவாக இருந்து தாய்ப்பால் கொடுக்க இடம் இருப்பது இல்லை. இவையெல்லாம் சிறு சிக்கல்கள். விரும்பினால் முடியும்.

### பால் இல்லையே!

சில பெண்கள் குழந்தைக்குக் கொடுக்கும் அளவுக்குப் பால் இல்லையே என்று நினைக்கிறார்கள். இது மனக்குறையே தவிர, உடல் குறையல்ல.

எந்தப் பெண்ணும் குழந்தைக்குப் பால் கொடுக்க முடியும். இறைக்கிற கிணறு ஊறும். பால் கொடுக்கக் கொடுக்க பால் ஊறும். போதிய பால் கிடைக்கும்.

அதற்கு என்று மருந்துகள் சாப்பிட வேண்டியது இல்லை. காய்கறி, கீரைகள் சாப்பிட்டாலே போதும். பால் கொடுக்குமுன் ஒரு ஆரஞ்சுப்பழம் சாப்பிடலாம். எல்லாவற்றையும்விட கொடுக்கக் கொடுக்கப் பால் ஊறும் என்பதே உண்மை.

குழந்தைக்கு இயற்கையான உணவு– தாய்ப்பால் கொடுங்கள். இது தாய், சேய் இருவருக்குமே நல்லது!

## குடிகாரக் கணவர்களை திருத்த ஒரு வழி...?

-எஸ்.பிரியா, ஜேர்மனி-

வாரியார் சொன்ன சம்பவம் இது-

ஒரு பெருங்குடி மகன் (குடிப்பதிலே சிறந்தவன்) இருந்தான். அவன் தினசரி குடித்துவிட்டு, தனது மனைவியை அடி அடி என்று அடிப்பான். அவனது மனைவி வலியைத் தாங்கிக்கொண்டு மௌனமாய் இருப்பாள். ஒரு நாள் அவன் மனைவியை அடித்தபோது, அவள் கதறி அழுதாள். அவள் கணவன் இது குறித்து ஆச்சரியமடைந்தான்.
"ஒரு நாளும் அழாத நீ ஏன் அழுகிறாய்-வலி பொறுக்க முடியவில்லையா?" என்று



கேட்டான்.
"நீங்கள் எப்போது அடித்தாலும் எனக்கு வலிக்கும். ஆனால் இன்று வலிக்கவில்லை. எனவே உங்கள் உடம்பில் சக்தி குறைந்து போய்விட்டதோ எனக்கவலைப்பட்டு அழுகிறேன்." என்றாள் மனைவி.
அதன்பின் அவளது கணவன் குடிப்பதையே விட்டு விட்டானாம்.

## ஒவ்வொரு ஆணோட வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பாள் என்பது பற்றி...?

-சிவகுமார், ஜேர்மனி-

மருத்துவ உலகில் புரட்சி செய்த, சர்க்கரை நோய் தணிக்கும் இன்சுலின் என்ற மருந்தைக் கண்டுபிடித்தவர் டாக்டர் பெடரிக் பேன்ட்டி. அவர் அந்த மருந்தைக் கண்டுபிடிக்கக் காரணமாக இருந்தது பெடரிக்கின் நெகிழும் நெஞ்சுதான்.

கனடா நாட்டு அலுவலகம் ஒன்றில் பெடரிக் வேலை செய்து கொண்டிருந்தபோது சின்ன வயதில் அவருடைய விளையாட்டுத் தோழியாக இருந்தவள் ஜானி. இருவரும் பந்து விளையாடுவதும், ஓடி விளையாடுவதும், மரங்களில் ஏறித் தாவுவதும் வழக்கம்.

ஒரு கோடையில் ஜானி என்ற அந்தச்சிறுமி இறந்து போனாள் என்று கேள்விப்பட்டு அதிர்ந்து போனான் பெடரிக். அவள் இறந்ததற்குக் காரணம் ஜானியின் ரத்தத்தில் சர்க்கரை இருந்ததுதான். இந்த நிகழ்ச்சியை பெடரிக் மறக்கவே இல்லை. அதன் விளைவாகத்தான் இலட்சோப இலட்சம் சர்க்கரை வியாதி கொண்ட உலக மக்களை காப்பாற்றும் மருந்தான இன்சுலின் மருந்தைப் பெடரிக் கண்டுபிடித்தார்.

## வாழ்க்கையில் வெற்றிபெற, அதிர்ஷ்டத்தைமட்டுமே நம்பியிருப்பவர்கள் பற்றி...?

-அன்ரனிதாஸ், ஜேர்மனி-

அதிர்ஷ்டத்தை மட்டுமே நம்பியிருப்பவர்கள் அப்படியே இருக்க வேண்டியதுதான் அன்ரனி. அவர்களால் வெற்றிபெற முடியவே முடியாது.

வாழ்க்கையில் வெற்றி கண்ட பலரைச்சந்தித்து அலசு, அலசு என்று அலசி அவர்களது அனுபவங்களைச் சாறு பிழிந்து தருகிறார் எட்வர்ட் டி போனோ என்ற அறிஞர்.

அதிர்ஷ்டசாலியா இருங்கள். கொஞ்சம் வெறி பிடித்தவராக இருங்கள். மிகவும் திறமைசாலிகளாக இருங்கள்.

1. அதிர்ஷ்டம்: நூறு பேர் ஒரு காரியத்தில் இறங்க, இருவர் மட்டும் ஜெகிக்கிறார்கள். ஏன்? நேரத்தை, வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள அவர்களுக்கு மட்டுமே தெரிந்திருக்கிறது. ஒரு பிரதமர் கொலை செய்யப்படுகிறார். அல்லது சட்டத்தில் ஒரு மாறுதல் வருகிறது. மற்றவர்கள் திகைப்புற்று நிற்க, இவர்கள் மட்டும் சூழ்நிலையைத் தங்கள் சொந்த முன்னேற்றத்திற்கு உபயோகப் படுத்திக் கொள்கிறார்கள். நீங்களும் அதிர்ஷ்டக்காரர்களாக இருங்கள். எந்த நிமிடமும் வாய்ப்புக் கிடைக்கக்கூடும். விழிப்போடு இருந்து, கிடைக்கும் சந்தர்ப்பத்தை முழுக்க முழுக்கப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

2. வெறி: வெற்றிபெற்ற மனிதர்களுக்கெல்லாம் உள்ள பொதுவான குணம். உடும்புப்பிடி. அடைய வேண்டும் என்று தீர்மானம் பண்ணி விட்டார்களோ அடையாதல் விடமாட்டார்கள். இடையில் தோல்வி நேர்ந்தால் வெற்றிக்கு மேலும் ஒரு படிக்கட்டாக அமைத்துக் கொள்வார்கள். நீங்களும் விடாமுயற்சி பழகுங்கள். அரைகுறையாக எதையும் விட்டுவைக்காதீர்கள்.

3. திறமை: சமமான திறமையுடன் இரு பெண்கள் இசையில் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். எந்தப்பெண் அதிகநேரம் பயிற்சி செய்து பழமையின் செறிவோடு புதுமையின் நுட்பங்களையும் புத்திசாலித்தனமாக இணைக்கிறாளோ அவள் தானே வெற்றி பெறுவாள்?

## எதற்கெடுத்தாலும் சிக்கனம், சேமிப்பு, என கஞ்சத்தனம் காட்டும் எனது பெற்றோர்களுக்கு ஒரு அறிவுரை கூறுங்களேன்...?

-எஸ். பரமேஸ்வரன், ஜேர்மனி-

உங்கள் பெற்றோருக்கு அறிவுரை சொல்வதற்கெல்லாம் எனக்கு வயது போதாது என்று நினைக்கிறேன்.
நீங்கள் கேட்டதற்காக ஒரு சம்பவத்தை சொல்கிறேன்.

தொடர்ச்சி 15ம் பக்கம்




# வெளிவந்து விட்டது!

கையிலிருந்தால் பெருமை;
படித்துப் பார்த்தால் அருமை!


## உங்கள் இளைஞனின் கேள்வி - பதில்களின் தொகுப்பு (பாகம் - 1)

விலை 5 டி.எம் மட்டுமே! தபாற்செலவுடன் 7 டி.எம்

- பெண்களின் கற்பு மட்டும் ஆராய்சிக்குள்ளாகிறதே ஏன்?
- வெள்ளைக்காரனுக்கும், எங்களுக்கும் நிறத்தைத்தவிர வேறென்ன வித்தியாசம்?
- தமிழன் முன்னேறாமல் இருப்பதன் காரணம்?
- திடீப் பணக்காரனாக ஏதாவது வழியுண்டா?
- வயதில் மூத்த பெண்ணை திருமணம் செய்யலாமா?
- யோசனை - சிந்தனை இரண்டிற்கும் உள்ள வேறுபாடு?
- முட்டாள் தனமாக கல்லைக் கடவுள் என்று வணங்கும் இந்து மதத்தினரைப்பற்றி..?
- ஐரோப்பிய மோகத்தில் அவசர, அவசரமாக தாய்மொழி மறந்ததுகள் பற்றி...?




**எத்தனை, எத்தனை பிரச்சனைகள், சந்தேகங்கள் 'இளைஞன்' வாசகர்கள் இதயத்தில் எழுகின்றன! அவற்றிற்கு உங்கள் சேகர் அளித்த அற்புதமான பதில்களின் தொகுப்பு!**



## குட்டிக் கதை!

**உலகத்திலேயே அதிக தத்துவ நூல்களை உடைய மதம் எந்த மதம்? தத்துவ ரீதி என்று... பொது கண்ணோட்டத்தில் பதில் தருக?**

*-ராஜா சிவகுமார், Dueren-*

அமைதியாகக் குளத்தில் குளித்துக் கொண்டிருந்தது யானை.
தண்ணீரை விட்டு வெளியே வரும்படி அதற்கு உத்தரவு போட்டது எலி. 'நான் குளிக்க வேண்டும்: நீ வெளியே வா!" என்று.

யானை: இவ்வளவு பெரிய இடம் இருக்கிறது. ஏதாவது ஒரு மூலையில் நீ குளித்துக் கொள்ளலாமே, இவ்வளவு பெரிய என் உடம்பைத் தூக்கிக்கொண்டு நான் வெளியே வருவதும், மறுபடியும் குளிப்பதற்குக் குளத்திற்குள் புகுவதும் மிகவும் கடினமான காரியம்.
எலி: நீ வெளியே வந்துதான் ஆகவேண்டும்.

யானை சிரமப்பட்டு எழுந்து வெளியே வந்தது. அது கரையேறி வந்தவுடனே, எலி மறுபடியும், 'நான் குளிக்கப் போவதில்லை. நீ போய்க் குளிக்கலாம்.' என்றது.

அமைதியோடு திரும்பிச் சென்று குளத்தில் இறங்கியது யானை. பிறகு எலியைப் பார்த்து, 'முதலில் நீ குளிப்பதற்காக வெளியே வரச் சொன்னாய். மறுபடியும் நீ போய்க் குளித்துக் கொள். நான் குளிக்கப் போவதில்லை, என்கிறாயே? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே?"

எலி: எனக்கு ஒரு சந்தேகம் இருந்தது. உன்னை முழுமையாகப் பார்த்த பிறகு என் சந்தேகம் தெளிந்தது.

யானை: அப்படியென்ன சந்தேகம்?

எலி: நீ என்னுடைய ஜட்டியைத் திருடிக் கொண்டிருக்கிறாய் என்று நினைத்தேன்.

(பின்குறிப்பு: இது ஒரு ஜென் புத்தகக் கதை. தத்துவம்: அளவிட முடியாத இறைவனைச் சிறியவர்களாகிய நாம் அளப்பதற்கு முயற்சி செய்கிறோம்.)

**இதுபோன்ற சுமார் நூறுக்கும் அதிகமான குட்டிக்கதைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன!**

சுமார் ௨௦௦ க்கும் அதிகமான கேள்வி - பதில்கள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன!


## தொடர்புகளுக்கு:

**"ELAIGNAN"**
**GINNHEIMER STR, 24 A**
**60487 FRANKFURT/ M**
**GERMANY**

24 மணிநேர தொலைபேசி அழைப்புகளுக்கு:

**0172/ 418 99 64**

# கேள்வி...

புரிஞ்சுக்குவாங்க என்று நினைக்கிறேன்.

"அம்மா... அட்லஸ் (Atlas) வேண்டும். விலை ஐம்பது ரூபாய். வரலாற்று ஆசிரியர் வாங்கச் சொன்னார்." என்றான் மகன்.

"டேய்... ஏண்டா காசைக் கரியாக்கிறது என்று நிற்கிறாய், உங்க அண்ணன் படிக்கும்போது வைத்திருந்த அட்லஸை வைத்து சாமாளித்தால், ஐம்பது ரூபா மிச்சம் பிடிக்கலாமே..." என்றாள் தாய்.

மகன் தலையசைத்தான்.

மறுவருடம்.

டிக்சனரி (Dictionery) கேட்டான்.

அம்மா அண்ணனின் பழைய டிக்சனரியை வைத்து ஒப்பேத்தச் சொன்னாள்.

அதற்கு அடுத்த வருடம் சைக்கிள் கேட்டான்.

புதுச் கைக்கிள் வாங்குவதற்கெல்லாம் எக்கச்சக்கமாக செலவாகும். உங்க அண்ணனின் பழைய சைக்கிளை திருத்திப் பாவிக்கச் சொன்னாள்.

சில ஆண்டுகள் சென்றன.

"அம்மா வயசாகிக்கிட்டே போகுது, கல்யாணம் செய்து வை" என்றான் மகன்.


அம்மாவால் இப்போது பதில் சொல்லத்தான் முடிந்திருக்குமா? அல்லது அவரின் கஞ்சத்தனத்தை தொடரத்தான் முடியுமா?

## உண்மையிலேயே மனிதன் குரங்கில் இருந்து பிறந்தவனா?

-பரமேஸ்வரன், செட்டிகுளம்-

குரங்கு - அது சாதாரணக் குரங்காக இருந்தாலும், மனிதக் குரங்காக இருந்தாலும் -சைவந்தான் சாப்பிடும். அசைவம் சாப்பிடுவது இல்லை. ஆனால், மனிதன் அசைவம் சாப்பிடுகிறானே...!

இந்தப்படத்தைப் பார்த்தால் அந்த ஐயப்பாடு ஏற்படாது.



## புலம்பெயர் ஈழத் தமிழர்கள் SHOW வான — -ஆடம்பரமான வாழ்க்கைக்கு அடிமையாகி வருகிறார்களே...?

-எம். நிமலன், பரிஸ்-

அண்மையில் அகால மரணமடைந்த இளவரசி டயானாவும் இப்படித்தான் ஒவ்வொரு நாளும் விதவிதமான விலையுயர்ந்த - கவர்ச்சியான ஆடைகளில் வலம் வருவார். ஒருமுறை அணிந்த ஆடைகளை மறுமுறை அணியமாட்டார். ஒவ்வொரு மாதமும் புதுவிதமான சிகை அலங்காரம். (காதலர்களும் கூட) இதனால் பல தொல்லைகளையும் சந்திக்க வேண்டியதா




யிற்று அவருக்கு.

இங்கிலாந்து பத்திரிகைகள் பல இவரை, ஒவ்வொரு நாளும் பின்சென்று கலைத்துப்பிடித்து, படம்பிடித்து புதுப்புது படங்களை சுடச்சுட பிரசுரித்து கோடிக்கணக்கில் சம்பாதிக்கத் தொடங்கின.

படப்பிடிப்பாளர்களின் தொல்லையால் வெளியே தலைகாட்ட முடியாத டயானா, தனது ஆலோசகரிடம் இதுபற்றி ஆலோசிக்க, அவரும் டயானாவுக்கு சில அறிவுரைகளை கூறினார். அதாவது விதவிதமான ஆடைகள் அணிவதையும், புதுவிதமான சிகை அலங்காரங்களையும் தவிர்த்து, சிலகாலங்களுக்கு அணிந்த ஆடைகளையும், ஒரேமாதிரியான சிகை அலங்காரத்துடனும் வெளியே சென்று வந்தால், படப்பிடிப்பாளர்களுக்கும், வாசகர்களுக்கும் போரடித்து, உங்கள் மீதான ஆர்வம் குறையும் என்றார்.

ஆடம்பரமான வாழ்க்கைக்கு அடிமையாகிவிட்ட டயானாவால் அது முடியவில்லை.

இறுதியில் என்ன நடந்தது? அதுதானே எல்லோருக்கும் தெரியுமே...!

## கடவுள் தூணிலும் இருப்பார். துரும்பிலும் இருப்பார் என்பதையெல்லாம் நம்பலாமா?


-கணேஷன், பரிஸ்-

இறைவனின் பெயரையே தங்கள் பெயராக வைத்துக் கொண்டு இப்படியொரு கேள்வி கேட்கலாமா?

ஒரு குருநாதர் தன் சீடனிடத்தில் "எல்லா உயிர்களிடத்தும் கடவுள் இருக்கிறார்" என்று வற்புறுத்திச் சொல்லி வந்தார்.

ஒருநாள் அந்தச் சீடன் கடைவீதியில் போய்க் கொண்டிருந்தபோது எதிரே ஒரு மதம் பிடித்த யானை ஓடி வந்தது. அதன் மீதிருந்த மாவுத்தன், "விலகிப்போ! நகர்ந்து கொள்!" என்று கத்தினான்.

ஆனால் அந்த சீடன், "அந்த யானைக்குள் கடவுள் இருக்கிறார். ஆகவே



யானை என்னை ஒன்றும் செய்யாது" என்று சொல்லிக் கொண்டு அங்கேயே நின்றான். யானை துதிக்கையால் பிடித்துத் தூக்கி எறிந்து விட்டுச் சென்றது.

அடிபட்ட சீடன் குருநாதரிடம், "உங்கள் வார்த்தையை நம்பியதால் இப்படி நேர்ந்தது" என்று அழுதான்.

குருநாதர் அவன் காயங்களுக்கு மருந்து போட்டு விட்டு, "அசடனே! யானையின் மீதிருந்த மாவுத்தனுக்குள்ளும் கடவுள் இருக்கிறார் அல்லவா? அந்தக் கடவுளின் பேச்சை நீ ஏன் கேட்கவில்லை?" என்றார்.

வாசகர்களிடமிருந்து ஜனரஞ்சகமான கேள்விகள் எதிர்பார்க்கப் படுகின்றன.



# கிறிஸ்மஸ் செய்திகள்

நெதர்லாந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகளில் புனித நிகோலாஸ் என்னும் பாதிரியார்கள் ஒவ்வொரு டிசம்பர் ஆறாம்தேதியும் மக்களுக்கு வெள்ளை குதிரை மீது வந்து பரிசு தருவார்கள்.

லங்காஷயர் என்னும் இடத்தில் ஆக்டன் என்னும் கிராமத்தினர் 1992ல் ஒரு பெரிய கிறிஸ்துமஸ் பலகாரம் தயாரித்தார்கள். இதை செய்ய 10 நாட்கள் ஆனது. அதன் எடை 3.28 டன்கள். இது ஒரு வெள்ளை காண்டாமிருகத்தின் எடைக்கு சமம்.

இந்த நூற்றாண்டில் எட்டு முறை கிறிஸ்துமஸ் தினத்தின் போது லண்டன் பனியால் மூடப்பட்டிருந்தது. இதை வெள்ளை கிறிஸ்துமஸ் என்கிறார்கள்.

இங்கிலாந்தில் கிறிஸ்துமஸ் தினத்தில் மட்டும் 2000 குழந்தைகள் பிறக்கிறார்கள்.

சில ஐரோப்பிய நாடுகளில் கிறிஸ்துமஸ் மரத்தை கொளுத்துவார்கள். அதில் ஒரு பாகத்தை எடுத்து வைத்துக் கொள்வார்கள். ஏன்? மறுவருடம் கொளுத்துவதற்குத்தான். அதில் மந்திர சக்தி இருப்பதாக அந்த காலத்தில் நம்பினார்கள்.

பின்லாந்தில் 'ஹஸ்கா ஜூலா' என்றால் மகிழ்ச்சியான கிறிஸ்துமஸ் என்று பொருள்.

கிறிஸ்துமஸ் மரங்கள் ஜெர்மனியில்தான் முதல் முதலாக தயாரிக்கப்பட்டது. 'பரலோக மரங்கள்' என்னும் மரங்களால் தயாரிக்கப்பட்ட இந்த கிறிஸ்துமஸ் மரங்களில் மெல்லிய உலோகத் தகடுகளும், விளக்குகளும் இருக்கும். இதில் பழங்கள், கொட்டைகள், வண்ணம் தீட்டப்பட்ட முட்டை ஓடுகள், பிஸ்கெட்டுகள், காகித மலர்கள் ஆகியவற்றை வைத்து அலங்கரித்தார்கள்.

உலகில் மிகப்பெரிய கிறிஸ்துமஸ் விருந்து அமெரிக்காவில் 15-12-1979-ல் நடைபெற்றது. போயிங் கம்பெனி நடத்திய இந்த விருந்து இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டது. சுமார் ஒரு லட்சத்து மூணாயிரத்து நூற்று ஐம்பத்திரண்டு பேர் கலந்து கொண்டார்கள்.

கிறிஸ்துமஸ் தினத்தன்று 'நைநோஸ என்வூயெல்டோஸ்' என்னும் உணவை அர்ஜென்டினா மக்கள் உண்கிறார்கள். இதற்கு 'குழந்தைகளுக்காக உறையிடப்பட்ட உணவு' என்று பொருள்.

1957-ம் ஆண்டில் இருந்து தான் இங்கிலாந்து ராணி தொலைக்காட்சி மூலம்' கிறிஸ்துமஸ் உரையாற்றுகிறார்.

கிறிஸ்துமஸ் விழா காலங்களில் எங்கு பார்த்தாலும் கிறிஸ்துமஸ் வாழ்த்துக் கார்டுகள் விற்கும் கடைகள் ஏராளமாக முளைத்திருக்கும். பல வண்ண நிறங்களிலும் வடிவங்களாலும் அச்சடிக்கப்பட்டு இருக்கும் இந்த வாழ்த்து கார்டுகளை உருவாக்கி அதற்கென ஒரு மரபை ஏற்படுத்தியவர் ஒரு சாதாரண அரசாங்க தொழிலாளி. அவர் பெயர் ஹென்றிகோல் என்பது. அவர் தன் ஓவிய நண்பரான ஜான் கேல்கோட்டிடம் ஒரு கார்டு வரைந்து தரும்படி கேட்டார். அந்த ஓவியத்தில் ஒரு நடுத்தரக்குடும்பம், கையில் கோப்பையுடன் ஏழைகளுக்கு உதவுவது போல வரையப்பட்டிருந்தது. அதை 1000 பிரதிகள் எடுத்து உறவினர்களுக்கு அனுப்பினார் ஹென்றி. மீதி கார்டுகளை ஒரு புத்தகக் கடையில் கொடுத்து விற்கும்படி சொல்லி விட்டார். இதுவே உலகின் முதல் கிறிஸ்துமஸ் கார்டு ஆகும். 154 ஆண்டுகளுக்கு முந்தைய இந்த கார்டுகளில் பதினைந்து தற்போது இங்கிலாந்தில் விக்டோரியா மற்றும் ஆல்பர்ட் காட்சியகங்களில் வைக்கப்பட்டுள்ளது. ஹென்றியின் கார்டு அடிப்படையிலேயே இன்றும் கிறிஸ்துமஸ் வாழ்த்து மடல்கள் அனுப்பப் படுகின்றன. லண்டனில் இப்பொழுது ஆண்டுதோறும் ஒன்றரை கோடி கார்டுகள் பரிமாறப்படுகின்றன. இவற்றிற்கு 7020 கோடி ரூபாய் செலவிடப்படுவதாக கூறப்படுகிறது.

கிறிஸ்துமஸ் கிராக்கர்ஸ் எனப்படும் பட்டாசு 1991ம் ஆண்டு 45.72 மீட்டர் நீளத்திற்கு தயாரிக்கப்பட்டது. இதற்கு பான்-பான்ஸ் என்று பெயர். பலத்த ஓசையுடன் வெடித்தது.

**அனைவருக்கும் எமது கிறிஸ்மஸ், தைப்பொங்கல் வாழ்த்துகள்!**

**ஒருவனை நாகரீகமாக்க விரும்பினால், அவனுடைய பாட்டியை நாகரீகமாக்க ஆரம்பிக்க வேண்டும்!**

**ஏழை கோழிக்கறி தின்றால் - ஒன்று அவனுக்கு நோய் வந்திருக்கும். அல்லது அவன் கோழிக்கு நோய் வந்திருக்கும்.**

# கவிதைப் போட்டி முடிவுகள்

## முதலாவது இடத்தைப் பெறும் கவிதை

### தாய் நாடே! தாய் நாடே...! என் நெஞ்சைத் தட்டிடடா!

பொரியாத முட்டையென அமிழ்ந்திருந்த உணர்வுதனை
வெறிகொண்ட செயலாலே வெளிக்கொணர்ந்த விலங்குகளே!
விழுந்திட்ட, எரிந்திட்ட ஓய்வுதரா நெருப்பாலே
எழுகிறதே கரமொன்று விடுதலைக்காய் தெரிகிறதா?
பிணந்தின்னும் பேய்கள் போல் இனவாதம் நின்றாடி,

இனந்தன்னை விடுதலைக்காய் ஏழுப்பிற்றே! உணராயோ?
விடுதலையே கனிந்துவரும் எனக்காட்டும் படத்தினிலே
விடுதலைக்காய் உழைத்திடலே கரமொன்று கேட்கிறதே!
உதவாயோ உதவாது ஒதுங்கித்தான் போவாயோ!
இதனைத்தான் உனைச் சொல்லி எழுப்ப அது முனைகிறதோ?
ஒற்றப்பனை, சிறுமரமும் பாலையான தாய்நிலமும்!
உற்றவரை இழந்த மண்ணில் இனவாதம் ஆடுதல்பார்!
தாய்மண்ணும் சிறு துகளாய்ச் சிதறிக் கிடக்கிறதைப்பார்!
பேய் ஆடும் நிலைமாற்ற சேய்க்கூட்டம் பொருதல் ஏன்?
தாய்நாடே! தாய்நாடே...! என் நெஞ்சைத் தட்டிடடா!

**-எழிலன், ஜேர்மனி-**




## இரண்டாவது இடத்தைப் பெறும் கவிதை

குண்டு பொழிந்து குருதி குடித்து
பெண்களைப் பிடித்துப் பேய்ப்பசி தணித்து
தொண்டுக் கிழத்தைத் துவக்கால் அடித்து
கண்டவர்க்கெல்லாம் கைவிலங்(கு)களித்து
சென்றிடுவாயோ தென்திசை நோக்கி
சிதறிடுவாய் நீ தீப்பிளம்பாகி...

அக்கினிக் குஞ்சுகள் ஆயிரம் பிறக்கும்
ஆணவப்படைகளின் ஆயுதம் பறிக்கும்
செக்கலின் விடியலில் தேன்தமிழ் மணக்கும்
தேசியகீதம் எம் செவிகளை நிறைக்கும்
புத்தனின் தத்துவம் புதைகுழி சேர்த்தபின்
சத்தமாய் அழைக்கிறார் சமாதானம் வேண்டுமாம்!

**-கலைவாணி இராஜகுமாரன், கனடா-**

## மூன்றாவது இடத்தைப் பெறும் கவிதை

வானத்தில் வலம் வரும் வல்லூறுக்கூட்டங்கள்
வீசி இறைத்திடும் நாசக் குண்டுகளால்
உயிர்துடிக்க உடல்சிதறும் நொடிப்பொழுதில்
உணர்விழந்து ஊமையாய் கண்கள் பனிக்கும்
உறவென்ற உரிமையிலே எம்மினம்
உதவிக்கரம் நீட்டுகிறார் எம்மிடம்
வாரிக் கொடுப்பது எம்பணி
விரட்டுவார் நம்பகை அவர் இனி
ஈழம் எனும் கருக்கலைக்க
எகிறிக் குதித்திடும் சிங்களப் பேய்கள்
உயர்ந்து நிற்கும் பனைமரமே
எதிரியின் உடல்கள் மண்ணில் சாய்கையில்
எட்டி உதைத்தொரு சேதி சொல்லிடு
எம்மண் இனி என்றும் பணியாது
சுதந்திர தாயகம் நாளை கனியும்

**கு. ஞானக்குமாரன், ஒஸ்னாபுறாக் - ஜேர்மனி**

---

### அனுபவ மொழிகள்

புத்தகக் கடைக்குச் சென்றால் ஏதாவது ஒரு புத்தகமாவது வாங்காமல் திரும்பாதீர்கள்.

கல்வி, அனுபவம் உங்கள் நினைவுகள் இவை மூன்றையும் உங்களிடமிருந்து யாரும் தட்டிப்பறித்துவிட முடியாது.

ஆக்கபூர்வமான யோசனைகள், ஆரம்பகட்டத்தில் இருப்பவர்களிடமிருந்துதான் வருகின்றன; அனுபவஸ்தர்களிடம் இருந்து அல்ல!

உங்கள் உணர்வுகளை யாரேனும் புண்படுத்தினால் புறக்கணித்து விடுங்கள். அதையே நினைவுபடுத்திக்கொண்டு முக்கியத்துவம் கொடுக்காதீர்கள்.

சின்ன விஷயங்களில் கூட நேர்மையைக் கடைப்பிடிப்பது என்பது சின்ன விஷயம் அல்ல.

பசும்புல் தரையில் கொஞ்சநேரம் படுத்திருந்து பாருங்கள், எவ்வளவு புத்துணர்வு பெறுகிறீர்கள் என்று!



# மனதைத் தொடும் சிறுகதை இது! 'பவித்ரம்'

வாசகர்களிடமிருந்து இதுபோன்ற சிறுகதைகள் எதிர்பார்க்கப்படுகின்றன (ஆ-ர்)



கதை - கே. பாக்யராஜ்
ஓவியம் - சேகர்

மடித்து வைத்திருந்த 'விஷ'ப் பொட்டலத்தைப் பிரித்து காதலன் ரமேஷிடம் நீட்டினாள் ப்ரியா. விஷத்தை ஒரு சில விநாடிகள் உற்று நோக்கிய ரமேஷ் -"ப்ரியா நம் காதல் நிறைவேறாததால் இந்த முடிவுக்கு வந்தோம். சாகும்முன் நாம் சந்தோஷமாக ஒரு மணி நேரம் இருந்துவிட்டுச் சாகலாமே!" என்று தயக்கத்துடன் கேட்டான்.

ப்ரியா அவனை அமைதியாகப் பார்த்தாள். பின் தன் ஜாக்கட்டிலிருந்து ஒரு பேப்பரை எடுத்து ரமேஷிடம் நீட்டினாள். அவசரமாக அதைப்பிரித்தான். அதில், "எங்கள் பெற்றோர்களே எங்கள் காதல் ஒரு கவிதை - இதில் காமமோ வயதுக் கோளாறோ கடுகளவும் இல்லை. சாவிலும் எங்கள் காதல் பவித்ரமாகத்தான் சாகிறது. சந்தேகமிருந்தால் சோதித்துப் பார்த்துவிட்டு அடுத்த தலைமுறைக்காவது பச்சைக் கொடி காட்டுங்கள். உயிரோடு உயிர் இணைந்து கொண்ட ப்ரியா & ரமேஷ்" என்றிருந்தது.

கண்கள் கொப்பளிக்க அவள் கையை முத்தமிட்டு விஷத்தை அவள் கையாலேயே ஊட்டச் செய்து தானும் அவளுக்கு ஊட்டினான் ரமேஷ்.

## கண்டுபிடி

'அப்பி அத்தை' என்ற எழுத்தாளர் பல பெண்கள் பத்திரிகைகளில் பெண்களின் கேள்விகளுக்குப் பதில் எழுதுகிறவர். அவற்றில் ஒன்று -

கேள்வி: இன்று காலை என் கணவரின் சட்டையைச் சலவைக்குப் போட்டபோது அதில் நிறைய லிப்ஸ்டிக் கறைகள் இருப்பதைக் கண் டேன். என் கணவரைக் கேட்டதற்கு அது தக்காளி ஜூஸ் என்கிறார். நான் என்ன செய்யட்டும்?

பதில்: யார் அந்த தக்காளி என்பதைக் கண்டுபிடியுங்கள்.

## ஒரு நட்சத்திரத்தின் சோகம்!

ஒரு கையில் டெலிபோனும் இன்னொரு கையில் தூக்க மாத்திரைப் புட்டியுமாக இறந்து கிடந்தார் ஹாலிவுட் நட்சத்திரம் மர்லின் மன்ரோ. தற்கொலை செய்து கொள்ளுவதற்குச் சில நாள் முன்பு 'லைஃப்' பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியில்:

"என்னை ஏதோ வியாபாரப் பண்டம் மாதிரி நினைக்கிறார்களே தவிர, என்னை எனக்காகவே மதிப்பவர்கள் யாரும் இல்லை. அதுதான் என் வருத்தம். விருந்துக்கு அழைக்கிறார்கள் - அங்கே நாலு பேருக்கு என்னைக் காட்டிச் சந்தோஷப் படுத்த வேண்டும் என்பதுதான் அவர்கள் எண்ணம். விருந்தின் போது இசை நிகழ்ச்சி வைக்கிறார்களே, அதுபோல நான் ஒரு விலையுயர்ந்த ஆபரணம், நகை, அவ்வளவுதான்.



தொகுப்பு- அன்ரனிதாஸ் ஜேர்மனி

## புகையை நிறுத்த வழி

சிகரெட் பழக்கத்தை நிறுத்த முயலும் சிலர், 'ஒருநாள் பூரா சிகரெட் பிடிக்காமல் இருந்து பார்த்தேன். மறுநாள் முடியவில்லை' என்கிறார்கள். அவர்களுக்கு இந்த யோசனை:

சிகரெட்டை நிறுத்திய முதல் தினத்தன்று, இரவு படுக்கும்போது, அன்று பூரா சிகரெட் பிடிக்காமல் இருந்ததை நினைவு படுத்திக் கொள்ளுங்கள். அன்று சிகரெட் பிடிக்க வேண்டும் போல் இருந்த சந்தர்ப்பங்களையும் ஆனால் பிடிக்காமல் இருந்ததையும் நினைத்துக் கொள்ளுங்கள். பிறகு 'நாளை நான் சிகரெட் பிடிக்க மாட்டேன்' என்று சொல்லிக் கொள்ளுங்கள். அப்படிச் சொல்லிய படியே தூங்கி விடுங்கள். மறுநாள் காலை கண் விழிக்கும்போது அதுவே உங்கள் முதல் எண்ணமாக இருக்கட்டும்.

-'ஹௌ டு ஸ்டாப் ஸ்மோக்கிங்'

# உலகில் தமிழர்கள்

## சுவிஸ் - பாசல் தமிழ் பாடசாலை கலைவாணி விழா

சுவிற்சலாந்தில் பாசல் நகரில், தமிழர்களால் தமிழ்ப் பிள்ளைகளுக்காக நடாத்தப்படும் தமிழ் பாடசாலையின் கலைவாணிவிழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. கடந்த 7 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் இப்பாடசாலையில் கல்வி பயிலும் 120 க்கும் மேற்பட்ட மாணவர்களும் பங்குபற்றும் விதமாக கலைநிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. பரதநாட்டியம், கவிதை, நாடகம், காவடி ஆட்டம் என்பவற்றில் பங்குபற்றி எமது தமிழ்க்குழந்தைகள் எமது கலாச்சார நிகழ்வுகளை நினைவூட்டினர்.
இவ்விழாவில் சங்கீதக்கதிரை, யானைக்கு வால் வைத்தல், பொது அறிவுப் போட்டி போன்ற போட்டிகளில் பங்குபற்றியதன் மூலம் பார்வையாளர்கள் மத்தியில் கலகலப்பூட்டியது மிகவும் குறிப்பிடத்தக்காகும்.
பாசல் தமிழ் பாடசாலைக்கு பலவகைகளில் உதவிவரும் "பிறை பிளட்ஸ் அக்சியோன்" (F. P. A) என்ற நிறுவனத்தின் அமைப்பாளர்களும் இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்தனர். பாடசாலையின் ஆரம்பகாலம் தொட்டு இன்றுவரை இலவசமாக கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவருக்கும் F. P. A நிறுவனத்தின் தலைவர்களில் ஒருவரான திரு. வலன்றெயின் பரிசில்கள் வழங்கி கௌரவித்தார். அவர் தனது உரையின் போது தமிழ்க்குழந்தைகள் தங்கள் தாய் மொழியையும், கலாச்சாரத்தையும் கற்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மாலை 3 மணிக்கு ஆரம்பமான விழா இரவு 10 மணிவரை நடைபெற்றது.






தகவல்: ரவீ - பாசல், சுவிஸ்
படப்பிடிப்பு: குணம் - பாசல்

## பிராங்பேர்ட் தமிழ்மன்றத்தின் 41 - வது ஆண்டுவிழா.

*20. 12. 97 அன்று பிராங்பேர்ட் தமிழ்மன்றத்தின் 9 வது ஆண்டுவிழாவும், 41 வது கலைநிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற்றது.*
*ஆங்கில ஏகாதியத்தில் அடக்குமுறையையும் மீறி சைவத்தையும் தமிழையும் வளர்த்த ஆறுமுகநாவலர் அரங்கிலே சிறப்பாக நடைபெற்றது. சிறுவர் சிறுமியர்கட்கான பாட்டு, பேச்சுப்போட்டிகளில் முதல் இடம்பெற்றவர்களின் பாட்டு, பேச்சு இடம்பெற்றதுடன் பரிசில்களும் வழங்கப்பட்டன.*
*கண்கவர் நடனங்களும், கண்ணீர் காவியம் என்ற தெருக்கூத்துப் பாணியிலான நாடகம் புதுமையாக இருந்தது. அன்றைய தினம் பிராங்பேர்ட் தமிழ்மன்ற இசைக்குழுவின் இசைநிகழ்ச்சியும் சிறப்பம்சமாக இடம்பெற்றது.*
*எல்லாவற்றுக்கும் மேலாக "இளைஞன்" சஞ்சிகையில் வெளிவந்த கேள்வி -பதில்கள் தொகுக்கப்பட்டு நூலாக அன்றைய தினம் வெளியிடப்பட்டது. இவ்வெளியீட்டு விழாவில் பிரபல மேடைப்பேச்சாளரும், எழுத்தாளருமான திரு. வண்ணை ஆனந்தன், தமிழ்தாசன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். இந் நூலை திரு. வண்ணைஆனந்தன் அவர்கள் வெளியிட்டு வைத்துப் பேசும்போது -ஈழத்து இலக்கியத்தை இரண்டு விதமாய் பிரிக்கலாம் ஒன்று போர்க்கால சூழ்நிலையை மையமாகக் கொண்டது. மற்றையது புலம்பெயர்ந்த மக்களின் அகதி வாழ்க்கையை வெளிப்படுத்துவது. புலம்பெயர் இலக்கிய வளர்ச்சிக்கு உதவும் சஞ்சிகைகளிலே "இளைஞன்" சஞ்சிகையின் சேவை குறிப்பிடத்தக்கதாகும். சஞ்சிகையின் பெயருக்கேற்ப அதன் ஆசிரியரும் ஓர் இளைஞன் தான்.*
*"இளைஞன்" சஞ்சிகையின் ஆசிரியர் ஓவியர் சேகர் பற்றி ஒரு வரியில் சொல்ல வேண்டுமானால் -"கடுகு சிறிது காரம் பெரிது". அவ்வளவுக்கு விஷயம் உள்ளவர். நடுங்கும் குளிருக்கு மத்தியிலே, கஷ்டமான*

(தொடர்ச்சி 23 ம் பக்கம்)

உங்கள் ... நூல் அறிமுகம்!



# கவிதை உலகம்

## இளையவரே!

வானவில் வாலிபம்
வாழும் நாள்
கொஞ்சமே...!

தமிழ்தாசன், ஜெர்மனி-

## ஓ... இளைஞனே...!

இந்தப் பூமியில்
எதுவுமே நிரந்தரமான
நிஜங்களில்லை
இளைஞனே!
உன் செயலைத் தவிர...

தேவேந்திரன்

## இவனும் ஓர் ஈழத்தமிழன்தான்

பிறந்த மண்ணின்
துயரத்தை தூக்கியெறிந்து
சுறுசுறுப்புக்கும் பரபரப்புக்கும்
வித்தியாசம் தெரியாத
"ஐரோப்பிய அவசரமாய்"...
யார் இவன்?

ஈழத்தில்
எம்மவர் உடல் கருக - இங்கு
இதயத்தை கருக்கிவிட்டு
இன்பத்தை தேடியலையும்
காமுகனாய்...
யார் இவன்?

நொங்கு வண்டில் சூழ்ந்து வர
குரும்பெட்டித் தேரிழுத்த
சுந்தர பூமியில்
"மனித
ரத்தமும், சதையும்
சிதறிக்கிடந்தால் தான் - எனக்கு
இங்கு
அகதி அந்தஸ்து தொடரும்"
என்கிறானே...!
யார் இவன்?

சோகங்களையே சுவாசங்களாக்கி -எமை
சுமந்த மண்ணில்
சமாதானக் காற்றன் சாயல் தெரிய
முகம் கறுத்து, விறுவிறுத்து
சமாதானம் கர்ப்பத்திலேயே கரைய
கடவுளை வேண்டுகிறானே...!
யார் இவன்?

அம்மாவும், அப்பாவும் -கூடவே
அக்காவும்
கொடுங்கோல் ஆட்சியில்
குடும்பத்தோடு முடமாக - இங்கு
குளுகுளுப்பான "குட்டி" தேடி
நாயாய் அலைகிறானே...!
யார் இவன்?

உணவின்றி, உயிரிழைத்து
மார்பு வற்றிய அக்கா - குழந்தை
அழுதாலும் சட்டை திறப்பதில்லையாம் - காரணம்
முலையில் பாலுமில்லை
அடிக்கடி திறந்து சட்டை கிழிந்தால்
மாற்ற வழியுமில்லை - ஆனால்
அவள் தம்பி - இங்கு
இந்திய நடிகை வந்ததும்
தடவித் தடவி
தங்கக் கொலுசு கட்டி விடுகிறானே...!
யார் இவன்?


இவனும் ஓர் ஈழத் தமிழன்தான்.

-ரமேஷ் வவுனியன், ஜெர்மனி-

# மீண்டும் ஓர் கவிதைப் போட்டி!



**இங்கே காணப்படும் படத்திற்கு பொருத்தமாக 15 வரிகளுக்குள் அடங்கக் கூடியயதாக ஓர் கவிதை எழுதி அனுப்புங்கள் பார்க்கலாம். முதலாவதாக தேர்ந்தெடுக்கப் படும் கவிதைக்கு 10 டி.எம் பரிசு காத்திருக்கிறது! முடிவு திகதி 31. 02. 98**




## மனிச கொரில்லா கதாநாயகியா?

சிலோன் சின்னத்துரை: இப்ப வாற தமிழ்ப்படங்களில் "மனிச கொரில்லா"-வும் நடிக்குதாம் கேள்விப் பட்டனியலே?

ஐரோப்பா ஐயாத்துரை: அது மனிச கொரில்லா இல்லையப்பா, "மனிஷா கொய்ரால" எண்ட பெயர் கொண்ட ஒரு பெண்ணப்பா.

சிலோன் சின்னத்துரை: !!!???...

சுவிஸ் அகதியார்




குழந்தைகளின் கண்கள்மூலம் வாழ்க்கையின் அதிசயத்தைத் தெரிந்து கொள்வதைப் போல மனநிறைவு தரும் உணர்ச்சி வேறு இல்லை.



**சிறுவர்களே உங்களிடமிருந்து ஆக்கங்களை எதிர்பார்கிறார் இளைஞன் மாமா**

# ஓ... மீன் குஞ்சே...!

- தண்ணீர் வானத்தில்
  மின்னலடித்து நீந்தும்
  ஓ... மீன் குஞ்சே!

- நீ கற்றறிந்தது அல்ல
  நீச்சல் கலை.
  கருவிலே உனக்கது
  கைவந்த கலை.

- உன்னை எனக்கு
  மிகவும் பிடிக்கும்.

- நீர்வழி செல்லும்
  மிதவையாகாமல்
  நீரை எதிர்த்து
  நீச்சலிடும்
  நெஞ்சுரம் உன்னிடம்
  நிரம்ப இருப்பதால்!

- ''மானம் இழந்தபின்
  வாழாமை முன் இனிது''
  என்பார்கள்.

- நீரை இழந்தபின் -
  நிச்சயம் நீ
  வாழ்வதே இல்லை!


- தவளையைப் போல்
  நீ
  தண்ணீரிலும் தரையிலுமா
  வாழ்கிறாய்?

- அதுதான் இல்லை!


- வாழ்வென்றால்
  அது தண்ணீரோடுதான்.

- உன் கொள்கை வாழ்வை
  நினைத்தால்
  எனக்குப் புல்லரிக்கிறது!


- மனிதனது
  குரங்கு வாழ்வை நினைத்தால்
  மனமோ கொதிப்படைகிறது!



## வண்ணம் தீட்டுங்கள்



இனிய சிறுவர்-சிறுமியரே! படத்தில் இருப்பது என்ன தெரியுமா? புள்ளிகளை எண் வரிசைப்படி இணைத்துப் பார்த்து தெரிந்துக் கொள்ளுங்கள்.



## புள்ளிகளில் கை வண்ணம்

# எப்படி இருப்பார் ஏசுநாதர்?

ஏசுபிரானின் திருவுருவத்தை அவர் உயிர் வாழ்ந்த காலத்தில் யாரும் ஓவியம் தீட்டியதில்லை. சிற்பம் வடித்ததில்லை. அவருடைய சீடர்களில் ஒருவரான ஸெயின்ட் பீட்டர் ரோமாபுரியில் ஒரு கிறிஸ்துவரின் வீட்டில் தங்கியிருந்த போது, "ஏசுநாமர் எப்படி இருப்பார்?" என்று அந்தக் கிறிஸ்தவர் கேட்டாராம்.

ஸெயின்ட் பீட்டர் ஒரு கைக் குட்டையில் அவர் படத்தை வரைந்து காட்டினாராம். ஏசுநாதரின் முதல் திருவுருவப்படம் என்று கூறப்படும் அது ரோமாபுரியில் உள்ள ஸெயின்ட் பீட்டர் தேவாலயத்தில் இன்றும் பத்திரமாக வைக்கப்பட்டுள்ளது.

# தேன்கூடு...

தனது "சிறிய சமுதாயத்தின்" பணியைத் தீவிரமாக ஆரம்பித்தார். தமது ஒருவேளை சாப்பாட்டிற்காக இச் சகோதரிகள் கையேந்தி பிச்சையெடுத்த அவலம், இக் காலகட்டத்தில் தான் சம்பவித்தது. இல்லாதவர்களுக்கு சேவை செய்ய முற்பட்ட இந்த அன்பு உள்ளங்கள், இரந்து தம் வயிற்றுப்பசியை போக்க முற்பட்ட பொல்லாத காலம் இது!
1950 இல் வத்திக்கான், அன்னை திரேசாவின் அமைப்பை ஒரு காருண்ய அமைப்பாக ஏற்றுக்கொண்டது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்! இந்து மதக் கோவில் ஒன்றுக்கு பின்பாக இருந்த கல்லூரிப் பெண்களின் தங்குமிடம் ஒன்றை இந்த அமைப்பு தனதாக்கி வாழ்வின் இறுதி நாட்களை எண்ணியபடி இருக்கும் நோயாளிகளுக்கு அபயமளித்து, ஆறுதல் கொடுக்கும் அரிய பணியை ஆரம்பித்தது. இது கத்தோலிக்க அமைப்பு என்பதால் எதிர்ப்புகள் முளைவிடலாயின. இந்தப் பணியை நிறுத்தும்படி நிர்ப்பந்தங்கள் கொடுக்கப்பட்டன. ஆனால் இந்து மதக்குரு ஒருவரே நோய் வாய்ப்பட்டு, அவரை வைத்தியசாலையில் ஏற்காத போது, இந்த அமைப்பு அவரை முழு மனதோடு ஏற்றதோடு, அவருக்கு வேண்டிய பணிவிடைகளையும் செய்தது. இவர் இறந்ததும் உடலை இந்து சம்பிரதாய முறைப்படி அடக்கம் செய்ய கோவில் நிர்வாகிகளிடம் அன்னை திரேசாவே கையளித்தார்.

இச்சம்பவம், அன்னை திரேசாவை கல்கத்தாவாசிகள் இனம் கண்டு கொள்ள உதவியது.

சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற இவர், ஒரு விருந்துபசாரத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். இதற்கு 7000 டாலர்கள் வரையில் செலவாகும் என்று கணிப்பிட்டிருந்தார்கள். எளிமையை விரும்பும் அன்னை திரேசா, இத்தொகையை ஏழைகளுக்கு அளித்து உதவ முடியும் என்ற உயரிய நோக்கோடு இந்த விருந்துபசார ஏற்பாட்டையே தடுத்து நிறுத்தி விட்டார்!

இன்று இவரது அமைப்பில் 4,000 சகோதரிகள் பணியாற்றுகிறார்கள். நீலக்கரை கொண்ட வெள்ளைச் சேலையையே இவர்கள் எல்லோரும் உடுத்துகின்றார்கள். 450 சகோதரர்களும் இந்த அமைப்பில் இணைந்து சேவையாற்றுகின்றார்கள். 120 நாடுகளில், 569 மிஷன்கள் இயங்குகின்றன!

பாப்பாண்டவரின் வணக்கத்திற்குரிய நண்பி என்ற ஸ்தானம், அன்னை திரேசாவிற்கு இருந்திருக்கின்றது. உலகின் நாலா திக்குகளிலும் இருந்து இவருக்கு நிதி உதவி சொரிந்த வண்ணமாகவே இருக்கின்றது. இது எவ்வளவு தொவை என்பது திடமாகச் சொல்லப்பட முடியாவிடினும் இந்தியாவில் மாத்திரம் சொத்துமதிப்பு 41 மில்லியன் டாலர்களைத் தாண்டும் என்கிறார்கள்!

இருதய வியாதியினால் அவதியுற்ற இவர் இடத்தை (1996 இல்) நிரப்ப வேண்டிய காலம் வந்துவிட்டது என்ற எண்ணம் அமைப்பில் தோன்றிற்று. இந்த அமைப்பின் 123 பிரதிநிதிகள், 96 ம் ஆண்டு மார்ச் மாதம் பிராமணப் பெண்ணான (இந்து) சகோதரி, நிர்மலாவின் மீது தலைமைச் சுமையை ஏற்றியுள்ளார்கள். 64 வயதான இவர் தன்னை அன்னை நிர்மலா என்று அழைக்க வேண்டாம், சகோதரி நிர்மலா என்றே அழையுங்கள் என்று பணிவுடன் கேட்டுள்ளார்!

அன்னை திரேசா இன்று மறைந்து விட்டாலும், இன்று அவர் காருண்ய அமைப்பு, தன் அரிய சேவையைத் தொடர்ந்து மறைந்த திரேசா என்றும் எம்முள் குடிகொண்டிருக்க வாய்ப்பளித்து வருகின்றது. மானிடராய் பிறப்பது அரிது. அப்படிப் பிறந்தும் இப்படி மானிட சேவை ஆற்ற முடிவது அரிதிலும் அரிது!

# வாத்துக்...

உதடுகள் துடித்து கண்கள் கலங்கின. அவளிற்கு பகீரென்றது.

"உனக்கு இரக்கமே இல்லை" என்றான். இத்தனை நாளில் எட்டு வயது சிறுவனுக்கு இன்று வந்த கோபம் அவளை ஒருவித பயத்திற்கு இட்டுச் சென்றது.

"அப்பாவை யாரோ கொன்று போட்டா... அதுமாதிரி..." ஓ என்று கதறத் தொடங்கினான்.

"குண்டு விழுந்தாக் கூட அதாலை ஓடமுடியாதேம்மா" லாவண்யாவின் பேச்சு அவளை ஊமையாக்கியது. முழங்காலிட்டு சிறிது நேரம் அழுதவன் "விசுக்" கென நிமிர்ந்தான்.

"நான் போறேன்."

"எங்கை ரமேஷ்?" பதறினாள்.

"எங்கடை வீட்டை."

"அங்கை செல் விழமேடா."


"விழட்டும். வாத்து கூட நானும் செத்துப் போறேன்." கூறியபடி திரும்பி வந்த வழியே ஓடத் தொடங்கினான். செய்வதறியாது ஒரு நிமிடம் நின்ற கோமளா அவன் பின்பே ஈடு கொடுத்து ஓட முடியாமல் கதறியபடி லாவண்யாவை விட்டு விட்டு ஓடினாள்.

வானில் திடீரெனத் தோன்றிய ஹெலிகாப்டரைக் கண்ட சனக் கூட்டம் சிதறி ஓடத் தொடங்கியது. இடி போன்று புறப்பட்ட வேட்டு சத்தங்கள் அதனின்று மண்ணை நோக்கிப் புறப்படத் தொடங்கின. இக்கரைக்கும் அக்கரைக்குமாய் இரு பிள்ளைகளையும் நினைத்து செய்வதறியாது நிலை குலைந்தாள் கோமளா.

"ரமேஷ்" என்றபடி மேலான ரவைகளையும் தாங்கிய அவள் நெஞ்சு மண்ணிலே சாய்ந்து துடித்தது. ஓடி வந்து தாயைக் கட்டிக் கொண்ட ரமேஷ் வாய் பேச முடியாது ஊமையானான்.

"உன் குஞ்ச பார்க்கப் போய் என் குஞ்சுகள் அனாதையாய்ப் போச்சே" அவளின் இறுதி வேதனை அவனை நெஞ்சில் முள்குத்தியது போல் உணர வைத்தது. அம்மா சுமந்த வேதனையுடன் பைகளையும் சுமந்து கொண்டு அந்த இரு குஞ்சுகளும் முடிவில்லா பயணத்துக்காக அந்த சனங்களோடு கூட நடக்க ஆரம்பித்தார்கள்.

"சிங்களத் தீவுகோர் பாலம் அமைப்போம்" பாரதியார் வரிகள் பலர் நெஞ்சுகளில் அவர் பாவம் என நினைக்க வைத்தது.



**இந்த முதலைக்கு ஊர் சுற்றிப் பார்க்க ஆசை வந்துவிட்டதா என்ன? அதுதான் இல்லை! ஒரு குளத்தில் இந்த முதலை வாழ்ந்தது. அந்தக் குளத்தில் தண்ணீர் வற்றவே, வேறு குளம் தேடிப் புறப்பட்டுவிட்டது! மிகத் தைரியமாக சாலையைத் தாண்டிப் போகிறது, பாருங்கள்! அமெரிக்காவில் கரோலின் நகரில் நடந்த அதிசயம், இது.**

## பிராங்...

வேலை கட்கும் மத்தியிலே இத்த கைய சேவை பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். அதிலும் சஞ்சிகையிலே வெளிவந்த கேள்வி -பதில் களை தொகுத்து நூலாக வெளியிடுவதில் நான் பெருமைப்படுகின்றேன்.

இந்நூலில் கேள்வி -பதில்க ளாய் பார்க்கின்ற போது எனக்கு ஞாபகம் வருவது "சி ரித்திரன்" ஆசிரியர் திரு. சி வஞானத்தின் கேள்வி -பதில் கள்தான். அந்தளவுக்கு சிரிக் கவும், சிந்திக்கவும் வைக்கும் தன்மையைக் காணக்கூடிய தாக உள்ளது. சுருங்கச் சொல்லி விளங்க வைப்பது டன், தேவையான இடங்க ளில் குட்டிக்கதைகள் மூலம் பதில் சொல்லும் விதம் சிறப் பாக உள்ளது. எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியில் இந் நூலை வெளியிடும் சேக ரைப் பாராட்டுவதில் பெரு மைப்படுகின்றேன் என்று பேசினார்.

(பாலச்சந்திரன்)

## சின்னச்...

ஆசைகளை வெளியிட்டிருக் கிறார்கள் இந்தப்பணக்காரர் கள்.

"பரகதியில் எமக்கு ஒரு இடம் வேண்டும்" என்று கேட்டி ருக்கிறார்கள் ஒரு சா ரார். (கட்டு நோட்டுக் களை வீசி பரலோகத்தில் நுழையும் ஆசை இவர்க ளுக்கு!)

"உண்மையான அன்புக்காக எவ்வளவு பெரிய தொகை யையும் செலவழிக்கத் தயார் என்கிறார்கள் இன்னொரு குழுவினர்.

"எவ்வளவு பணமும் தரத் தயார் எமக்குக் காலமெல் லாம் இளமை வேண்டும்" என்கிறார்கள் வேறு ஒரு பணக்காரக் கும்பலில் உள் ளவர்கள்.

"இழந்த காதலை மீண்டும் பெற பெரும்தொகை செல விடத்தயார்" என்று சிலர் தமது ஆசையை வெளிப்ப டுத்த, ஜனாதிபதியாகிவிட தம்பணத்தில் பெருந்தொ கையைச் செலுத்தத் தயார், இன்னும் சிலர் தமது ஆசையை வெளிப்படுத்தி நார்கள்.

ஒருவேளை சோற்றுக்கே திண்டாடு பவர்கள் ஒருபுறம் அல்லல்பட, உள்ள பணத்தை எப்படிச் செல விடுவது என்று தெரியாது அல்லல் படுகிறார்கள் இவர் கள்.

விந்தையான உலகம்!



சிலர் எப்போதும் உற்சாகமின்றிச் சோர்வாகவே- கவலையுடன் - காணப்படு கிறன்றனர். இதற்குக் காரணம் என்ன? மன அழுத்தம் தான். கவலை இருந்தாலும் தினசரி பத்து நிமிடங்களாவது உடற்பயிற்சி செய்தால் மன அழுத்தம் குறையும். உடற்பயிற்சி உடலுக்கு மட்டுமல்ல, மனத்திற்கும் நல்லது என்பது புதுக் கண்டுபிடிப்பு.

### அட பைத்தியமே!

ஒரு மகிழ்ச்சியான சூழ்நிலைகூட திடீரென்று அச்சப்படத்தக்கதாக மாறி விடும். பறந்து கொண்டிருந்த விமானத்தில் விமான ஓட்டி சிரித்துக்கொண்டே இருந்தார். பயணிகளும் மகிழ்ச்சியாக இருந்தனர். விமான ஓட்டியின் அதிக மான சிரிப்பைக் கண்டு சந்தேகப்பட்ட ஒரு பயணி, "ஏன் இப்படி சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு விமான ஓட்டி சொன்ன பதில்: "பைத்தியக்கார ஆஸ்பத்திரி யிலிருந்து ஓடிவந்துவிட் டேன். அங்கே என்னைத் தேடிக்கொண்டிருப்பார்கள். அதை நினைத்தால்தான் சிரிப்பு வருகிறது."

பயணிகள் முகமெல்லாம் பேயறைந்தது போலாயிற்று.

### அவ்வளவு பயம்!

ஒரு பையன் தன் அப்பா விடம் கேட்டான்.

"அப்பா! மாட்டைக் கண்டால் பயப்படுவீர் களா?"

"மாட்டேன்."

"பாம்பைக் கண்டால்?"

"பயப்படமாட்டேன்."

"பூதத்தைக் கண்டால்?"

"பயப்படவே மாட் டேன்."

"ஆக, அம்மாவைத் தவிர வேறு எதுக்கும் நீங்கள் பயப் படுவதில்லை என்பதைக் கண்டுபிடித்துவிட்டேன்" என்றான், பையன்!


S & S
TELEWORLD
IT EASY TO CALL!
INTERNATIONAL PHONE CALLS UP TO 60% CHEAPER THAN STANDARD TELEPHONE CHARGES AND TELE - CARDS
Taunus Str. 52 - 60
60329 Frankfurt/M
Tel: 069/ 23 66 10

CAR INSURANCE SERVICES
மிக குறைந்த வீதத்தில்
55% தொடக்கம் 85% வரை!
(கார் இன்சூரன்ஸ் செய்து தரப்படும்)
CAR INSURANCE வாகன காப்புறுதி
LIFE INSURANCE ஆயுள் காப்புறுதி
TRAVEL INSURANCE பிரயாண காப்புறுதி
TICKET SERVICES பிரயாணச் சீட்டு சேவை
விபரமான தொடர்புகளுக்கு
TRV
Insurance Services
FRANKFURT/M
Tel: 0172/ 2940046
Tel.0172/4716592
Fax.069/38998948
24 மணிநேரமும்
COLOMBO: 1234,- DM
SINGAPORE: 1250,- DM
TORONTO: 850,- DM
NEWYORK: 699,- DM
24 HOURS SERVICES

http ://www.thamizham.net 1088/09
FREE E - BOOKS (TAMIL)
[illegible]



Largest Circulation in Europe
இளைஞன்

ELAIGNAN
Ginnheimer Str, 24 A
60487 Frankfurt/M
Germany
Tel: 0172 - 4189964

வெளிவந்து விட்டது!
கையிலிருந்தால் பெருமை; படித்துப் பார்த்தால் அருமை!

உங்கள் சேகரின் கேள்வி - பதில்கள் தொகுப்பு (பாகம் - 1)

விபரங்களுக்கு 14 ம் பக்கம் பார்க்க!

# பூ போல...



இவை எந்த செடியில் பூத்துள்ள பூக்கள்? சரியாக சொல்ல முடியுமா? யோசிக்காதீர்கள். உங்களால் சொல்ல முடியாது. இவை ஒருவகை விலங்குகள். கடலில் மட்டுமே வாழ்கின்ற மிருதுவான உடலை உடைய விலங்குகள். உடலின் மையத்தில்தான் இந்த விலங்குகளுக்கு வாய் இருக்கும். வாயைச் சுற்றிலும் பூவிதழ்கள் போல விரிந்துள்ள கொம்புகள் இருக்கும். இவைகள் மற்ற சிறிய விலங்குகள் வருவதைப்பற்றிய உணர்வுகளை இந்த கொம்புகள் மூலமாக அறிந்துகொண்டு வாயை விரிவாக திறந்து வைக்கும். வாய்க்குள் வரும் இரையை தின்றுவிடும். இது ஆழமில்லாத கடல் பகுதிகளில் பாறைகளின் மீது ஒட்டிக் கொண்டு உயிர் வாழ்கின்றன.


# சின்னச் சின்ன ஆசை

ஆசைகள் பலவிதம். ஆனால் ஒவ்வொன்றும் ஒருவிதம் என்பார்கள். ஆனால் இந்த ஆசைகள் இடத்திற்கு இடம் மாறிவிடுவதுண்டு. கோடீஸ்வரர்களின் ஆசை, கோடித்துணிக்கே வழியில்லாத ஏழைகளின் ஆசைகளிலிருந்து வேறுபடுவதுண்டல்லவா? இந்தக் கோடீஸ்வரர்களுடன் உரையாடி உங்கள் பெரிய ஆசைதான் என்னவென்று ஒரு கணிப்பீட்டை அமெரிக்காவில் நடாத்திய போது தமது விசித்திரமான

(தொடர்ச்சி 23 ம் பக்கம்)




# சாட்சாத் டயனாவே தான்!



இளவரசி டயானாவின் படம் பொறித்த வடகொரிய முத்திரைகள், முத்திரை சேகரிப்பாளர்களுக்காக, டோக்கியோவின் விஷேஷமான கடைகளில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.
இளவரசி டயானா குழந்தையாக உள்ள இளவரசர் வில்லியத்தைச் சுமந்தபடி உள்ள படத்தைக் கொண்ட முத்திரை சூடாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது -அதுவும் 35 டாலர் வரையில்!
தமது கட்சித் தலைவர்களின் படங்களையே வெளியிட்டு வந்த வடகொரியா, டயானாவை அச்சிட்டு எல்லோரையும் அசத்தியிருப்பது மட்டுமல்ல, இந்த கம்யூனிஸ நாடு இப்படியும் தன் 'முத்திரையை' பதிக்குமா என்ற மலைப்பையும் ஏற்படுத்தியுள்ளது.
பட்டினியால் வாடும் வடகொரிய மக்களுக்கு இந்த வருமானம் ஒரு சிறிய ஆறுதலாக இருக்கட்டுமே!

# கலைக்கப்பட்ட 'கரு'வை சாப்பிடும் சீனர்கள்!

(டோக்கியோ-)
பாம்பு மற்றும் தவளை போன்றவற்றை சாப்பிடும் சீனர்கள், இப்போது கலைக்கப்பட்ட 'கரு'வையும் சாப்பிடுகிறார்கள் என்று தகவல் வெளியாகி உள்ளது.
'பெண்கள் வயிற்றில் உண்டாகும் கரு, ஒரு சில மாதங்களில் கலைக்கப்பட்டால் அந்த கருவை சுத்தம் செய்து சாப்பிடலாம். அது மிகவும் சத்தானது' என்று சீன டாக்டர் ஒருவர் கூறியுள்ளார்.
'கலைக்கப்பட்ட கருவைச் சாப்பிட்டால் நமது தோல் மிருதுவாகும் உடல் வலுவடையும் நமது சிறுநீரகத்துக்கும் நல்லது' என்றும் அவர் கூறினார்.

தென் சீனாவைச் சேர்ந்த ஒரு பெண் டாக்டர் கடந்த 6 மாதங்களில் 100 க்கும் மேற்பட்ட 'கரு'வை சாப்பிட்டதாக கூறுகிறார்.

'இளம் பெண்களுக்கு தலைப்பிரசவத்தில் உருவான ஆண் குழந்தை 'கரு'தான் மிகச் சிறந்தது. அதை 'சூப்' வைத்தும் சாப்பிடலாம்' என்றார். அந்த சீன டாக்டர்.

எஸ் & எஸ் ஆசியன் சொப்

பசுமைமிக்க இந்தியா, இலங்கை, தாய்லாந்து, கெனியா ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதியாகும் மரக்கறி வகைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் பலசுவை ஊட்டும் உடன் ஆட்டிறைச்சி கடலுணவுப்பொருட்கள், மளிகைப்பொருட்கள், எவர்சில்வர் பொருட்கள் சீடி, ஆடியோ, வீடியோ நாடாக்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

S & S ASIAN SHOP
Frankfurt
Tel: 069/ 236605
Fax: 069/ 236610